Registered No. M 5068.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப் பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ கார்த்திகைமீ 21௳ 6—12—1948 ஹிஜ்ரி 1368 மொஹரம்மீ 4௳ திங்கட்கிழமை } இதழ் 42

ஹைதராபாத் சமஸ்தானம்.

<u>சென்ற வாரத் தொடர்ச்சி.</u>

ஹைதராபாதின் சுமுகமான சூழ்நிலை கெடவாரம்பித்ததெனினும் வகுப்புவாத விஷம் நிஜாமை மட்டும் பீடிக்கவில்லையென்றே சொல்லவேண்டும். இத்திஹாதுல் முஸ்லிமீன் வகுப்புவாத கட்சியிடம் நிஜாம் அனுதாபம் கொள்ளவில்லை. 1942-ல் மேற்படி ஸ்தாபனத்தின் தலைவராயிருந்த காலஞ்சென்ற பஹதூர் யார் ஜங் ஹைதராபாதை முஸ்லிம் ராஜ்யம் என்று கூறியதை மறுத்து "சமஸ்தானம் முஸ்லிம்களுக்கோ, ஹிந்துக்களுக்கோ சொந்தமல்ல; ஆஸிப் ஜாஹ் வம்சத்தினருக்கே சொந்தம்; ஹிந்து முஸ்லிம்கள் இருவரும் பிரஜைகளேயாவர்; இருவர்களுக்குமிடையே எவ்வித பாகுபாடுமில்லை" என்று பிரகடனம் செய்து நிஜாம் தன் நிலையை தெளிவாக்கினார். அதையடுத்து இத்திஹாதுல் முஸ்லிமீன் தலைவருடைய ஜாகீர் ஜப்தி செய்யப்பட்டது ஆயினும் அவர் ஸ்தாபனத்திலிருந்து விலகவில்லை. அதற்குப் பிறகு பஹதூர் யார்ஜங் திடீர் மரணமடைந்தார். அவரை நிஜாமே விஷமிட்டுக்கொன்றுவிட்டதாகக்கூட வதந்திகள் பரவின.

பிரதம மந்திரி நவாப் சதாரியின்பதவிகாலம்முடிவடைந்த பிறகு சர் மிர்ஸா இஸ்மாயீலின் பெபர் பிரஸ்தாபிக்கப்பட்டது. உடனே மிஸ்டர் ஜின்னா ஹைதராபாத் சென்று பிரதமர் நியமனம் பற்றி நிஜாமுடன் விவாதித்தார். சர்மிர்ஸாவுக்கு எதிராக முழு சக்தியையும் உபயோகித்தார். ஆயினும் சர்மிர்ஸா இஸ்மாயீல் பிரதம மந்திரியாக நியமனம் பெற்றார். தர்பார் மரியாதைகளுக்கு மாறாக நடந்துகொண்டமையால் மிஸ்டர் ஜின்னாவுடன் பேச்சுவார்த்தை நடத்த நிஜாம் மறுத்துவிட்டதாகக்கூட அப்பொழுது பேசப்பட்டது. எது எப்படி இருப்பினும் ஸர்மிர்ஸா பிரத்மராக நியமிக்கப்பட்டார். அச்சமயத்தில் மந்திரி சபை தூதுகோஷ்டி இந்தியாவுக்கு விஜயம் செய்து தேசீயத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்ததால் மூட்டை கட்டி புறப்படும் தருவாயிலிருந்த வெள்ளையர்களுக்கு சர்மிர்ஸாவின்நியமன விஷயத்தில் தலையிட அவகாச மிருக்கவில்லை.

இதற்கிடையே இத்திஹாதுல் முஸ்லிமீன் ஸ்தாபனம் பலமடைந்து வந்ததை மறுப்பதற்கில்லை. இந்தியாவில் முஸ்லிம்லீக் வகுப்புவாதத்துக்கு கிடைத்து வந்த வெற்றிகளால் சமஸ்தானத்தின் வகுப்புவாத ஸ்தாபனத்துக்கு சக்தியும் உற்சாகமும் பெருகி வந்தன. நவாப் சதாரியின் பதவிகாலத்தில் கூட ஒரு மசூதி பற்றிய விவகாரத்தில் இத்திஹாதுல் முஸ்லிமீன் ரஜாக்கர்கள் பிரதம மந்திரியின் வீட்டையே தீக்கிரையாக்கினர். வீட்டுச் சாமான்களை யெல்லாம் வெளியே தூக்கி யெறிந்தனர் அதிலிருந்து நிஜாமின் சோகக்கதை ஆரம்பமாயிற்று. எல்லா சமூகத்தினரையும் சமமாக பாவிக்கும் தன் மூதாதையரின் கொள்கையை கடைபிடிக்க விரும்பிய நிஜாம் இத்திஹாத் வகுப்பு வாதிகளுக்கு எதிராக சக்தியற்றிருந்ததால் இரண்டுங் கெட்டானாகி விட்டார். ரஜாக்கார் ஸ்தாபனத்தை குழிதோண்டிப் புதைக்க கங்கணங் கட்டியிருந்த ஸர் மிர்ஸாவுக்கு ஏக காலத்தில் இருவரையும் திருப்தி செய்ய முயன்ற நிஜாமின் போக்கு பிடிக்கவில்லை. ரஜாக்கர்களை நிர்மூலம் செய்யும் அளவுக்கு ஸர்மிர்ஸாவை விட்டுவிட நிஜாமும் சம்மதிக்கவில்லை. அதனால் பாஸிஸ்டுகாஸிம் ரஸ்வியும் ரஜாக்கர்களும் சர்மிர்ஸாவை ஒடுக்குவதில் வெற்றியடைந்துவிட்டனர். ஸர் மிர்ஸா ஹைதராபாத்திலிருந்து ஓடவேண்டிய அளவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டு ஓடியும் விட்டார்.

பிறகு சமஸ்தான ஆட்சி காஸிம் ரஸ்வியின் கையில் சிக்கிக் கொண்டது. நிஜாம் ரஸ்வியின் கைப் பொம்மையானார். இன்னொருபுறம் இந்தியாவில் முஸ்லிம்லீக் ஜிந்தாபாத் வெத்து வேட்டுகளுக்கு வெற்றிமேல் வெற்றிகிடைத்து பாகிஸ்தானும் அமைந்தது. ரஸ்வியும் ரஜாக்கார்களும் இந்தியாவில் தங்கள் சகவகுப்புவாதிகள் அடைந்த வெற்றியால் உற்சாகமடைந்து மிஸ்டர் ஜின்னாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றவாரம்பித்தனர். அத்துடன் ஜமீந்தார்களையும் சமஸ்தானாதிபதிகளையும் ஒழிக்க இந்தியாவில் வானதிரக்கிளம்பிக் கொண்டிருந்த கோஷங்களைக் கேட்டு நிஜாமும் கதிகலங்கிவிட்டார். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற நிலைமையிலிருந்த நிஜாமுக்கு காஸிம் ரஸ்வியின் கொக்கரிப்பு ஆறுதலளித்ததில் ஆச்சரியமில்லை ஹைதராபாத் இந்திய யூனியனில் சேர்ந்தால் ராம்பூரில் நடந்ததைப் போலவே நிஜாம் ராணுவத்திலுள்ள அரபியர், பட்டாணியர்களும் கலகம் செய்வார்களென்று ரஸ்வி பயமுறுத்தினான்.

இவ்விதமாக நிஜாம் ஊசலாடிக்கொண்டிருக்கையில் சில காரணங்களை முன்னிட்டு நடவடிக்கையிலிறங்காமல் இந்திய யூனியனும் விட்டுக்கொடுத்துக் கொண்டே வந்தது. அதை இந்திய யூனியனின் பலஹீனமென்று தவறாக மதித்த நிஜாம் காஸிம் ரஸ்வியின் புஜபல பராக்கிரமத்தால் சுதந்திர ஹைதராபாத் கனவில் மெய்மறந்துவிட்டார்.

முடிவில்லா பேச்சுவார்த்தை.

ஸர் மிர்ஸாவின் ராஜினாமாவுக்குப் பிறகு மந்திரி சபை அமைக்க காஸிம் ரஸ்வியின் கையாளானலாயிக் அலி அழைக்கப்பட்டதிலிருந்து சமஸ்தான நிர்வாகம் காஸிம் ரஸ்வியின் கைக்கு மாறிற்று. அத்துடன் சமஸ்தான நிர்வாகம்குலைந்து, குண்டர்கள் அராஜகம், கொலை, கொள்ளை, பொசுக்கல் முதலிய காரியங்களில் ஈடுபடலாயினர்.

இந்திய யூனியனுக்கும், சமஸ்தானப்பிரதிநிதிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் துடங்கின. பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டே இருதரப்பிலும் பலம் திரட்டும்வேலை ஆரம்பித்தது. சமரசஎண்ணமேஇல்லாமல் சமரசம்செய்து கொள்ள விரும்புவதைப்போல் பாசாங்கு செய்துகொண்டு சமஸ்தானப் பேர்வழிகள் ராணுவ பலத்தை பெருக்குவதில் தீவிரமாக முனைந்தனர். பாஸிஸ்ட்ரஸ்வி வாய்க்கொழுப்பாகப் பேசி இந்திய யூனியனை வம்புக்கு இழுத்தான். அஹிம்ஸையை அனுஷ்டிக்கும் இந்திய யூனியனைத் தவிர வேறெந்த நாடும் ரஸ்வியின் வாய்க்கொழுப்பை சகித்திருக்காதென்பது திண்ணம். ஜயின்யார்ஜங்க், மூஈன்நவாஸ்ஜங், ஜஹீர்யார்ஜங்க் முதலிய ஜங்க் (யுத்தம்) பட்டதாரிகள் டில்லிக்கு வருவதும் போவதுமாய் இருந்தனர். ஜங்க் (யுத்தம்) பட்டதாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திஉடன்பாடு ஏற்படுமென்று எவரும் நினைத்திருக்க முடியாது. கடைசியில் (யுத்தம்) ஜங்க் ஆரம்பித்தபோது இந்த ஜங்க் (யுத்தம்) பேர்வழிகள் இருக்குமிடமே தெரியவில்லை.

1948 ஜூனில் கடைசி பேச்சு வார்த்தைகள் நடந்தன. இந்திய யூனியன் தன்னுடைய இறுதி கோரிக்கைகளை கீழ்வருமாறு அறிவித்தது.

1. உள் நாட்டு நிர்வாக விஷங்களில் ஹைதராபாத் பரிபூரண சுதந்திரத்துடனிருக்கு .

2. அசாதாரண நிலைமையில் அவசியமென்று கருதப்பட்டால் தற்காலீகமாக ஹதராபாதில் தன்னுடைய ராணுவத்தை வைக்க இந்தியாவுக்கு உரிமையுண்டு.

3. இருபதினாயிரம் பயிற்சிபெற்ற ராணுவத்தை எண்ணாயிரம் பயிற்சிபெறாத ராணுவத்தையும் நிஜாமும் வைத்துக்கொள்ளலாம்.

4. அன்னிய நாடுகளில் தூதர்களையும் வர்த்தக ஏஜெண்டுகளையும் (இந்தியாவின் விருப்பப்படி) நிஜாம் நியமித்துக் கொள்ள முடியும்.

5. மூன்று மாதங்களுக்குள் ரஜாக்கார்கள் ஆயுதப் பரிகரணம் செய்யப்படுபவர்.

6. ஹைதராபாதே தன்னுடைய அரசியல் திட்டத்தை உருவாக்கும் நிஜாமின் கீழ் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாட்சி ஏற்படுத்தப்படும்.

7. நிஜாமின் எல்லா கௌரவங்களும் எப்பொழுதும்போல் இருந்துவரும்.

8. போக்குவரத்து, தந்தி, தபால் சம்பந்தப்பட்டவரை 1947 நவம்பர் ஸ்தம்பன ஒப்பந்தமே நீடித்திருக்கும்.

9. இந்திய பார்லிமெண்டு நிறைவேற்றும் விதிகள் ஹைதராபாத் அஸெம்பளியிலும்நிறைவேற்றப்படும். அல்லது நிஜாம் அவற்றை பிரகடனம் செய்து அமுலாக்குவார்.

இந்திய யூனியனின் மேற்கூறிய கோரிக்கைகளை ரஸாக்கார்களின் சக்தியால் மமதைபிடித்திருந்த காஸிம்ரஸ்வி ஒப்புக்கொள்ளாமல் தன்னுடைய தலையில் மண்ணைவாரிப்போட்டுக் கொண்டதுடன் நிஜாமையும் இடுக்கண்களில் சிக்கவைத்து விட்டான். இனி மேற்கூறிய சலுகைகள் நிஜாமுக்கு கிடைக்கப்போவதில்லை. உள்நாட்டில் சுதந்திர அரசுரிமை, அன்னிய

நாடுகளுடன் ராஜீய உறவு, ராணுவம் முதலிய விஷயங்களில் நிஜாமுக்கு அளிக்கப்படவிருந்த சலுகைகள் இதர சமஸ்தானங்களுக்கு அளிக்கப்படாதவையாயிருந்தன. நிஜாம் அதையேற்று சமரசம் செய்து கொண்டிருந்தால் இதர சமஸ்தானாதிபதிகளின் கோரிக் கைகளால் இந்திய யூனியன் திகைத்துப்போயிருக்குமென்பது நிச்சயம். இவ்வளவுதூரம் விட்டுக் கொடுத்த பிறகும் நிஜாம் சமரசத்துககு வாராததால் பேச்சு வார்த்தை நடத்துவதை நிறுத்திக்கொள்வதைத் தவிர இந்தியாவுக்கு வேறு வழியில்லாமல் போய் விட்டது.

இருப்பினும் இந்தியா நடவடிக்கையில் இறங்கி விடவில்லை. நடவடிக்கை நாளை ஒத்திப்போட்டுக் கொண்டே வந்தது சதனுல் ஒவ்வொருநாளும் ஹைதராபாதிலிருந்துகிடைத்துவந்த கொலை,கொள்ளை, கற்பழித்தல், மதமாற்றம் போன்ற செய்திகளையும் கொட்டை யெழுத்துக்களில் தலைப்புக் கொடுத்து பத்திரிகைகள் பத்தி பத்தியாக எழுதிவந்ததையும் படித்து மனவேதனையடைந்த இந்தியர்கள் இந்தியசர்க்காரின் விட்டுக்கொடுக்கும் கொள்கையை சந்தேகிக்கவும் ஆரம்பித்தனர். ஆனுல் காஸிம் ரஸ்வியோ செங்கோட்டையில் கொடிநாட்டப்போவதாக முண்டா தட்டிக் கொண்டிருந்தான். சகிப்புத்தன்மையால் காங்கிரஸ் சர்க்கார் தன்னைத்தானே நெருக்கடிக்குள்ளாக்கிக் கொண்டிருந்தது.

செப்டம்பர் 13-ல் ஐந்து முனைகளில் இந்திய யூனியன் எடுத்த நடவடிக்கையால் வருஷக்கணக்கில் பேசி தீர்க்கப்படாத பிரச்சனை ஐந்தேதினங்களில் தீர்ந்தது. செப்டம்பர் 17-ல் நிஜாம் நிபந்தனையற்ற சரணுகதியடைந்தார். பிறகு நடந்த சம்பவங்கள் அனைவருக்கும் தெரியும்.

கோஷங்கள் போட்டு கலவரங்களைத் தூண்டிவிட்டு பாகி தான் வாங்கி விட்டதைப்பார்த்த மீசை முறுக்கி முண்டாதட்டி ஹைதராபாத் தனியரசை அமைக்க கனவுகண்ட ரஸாக்கார்கள் பயிற்சி பெற்ற ராணுவத்தை எதிர்த்து நீற்பது சாமானியமல்ல வென்று சீக்கிரமே உணர்ந்தனர். இந்தியப் படைகள் சிக்கந்தராபாத்தில் பிரவேசித்த செப்டம்பர் 18-ல் ஹைதராபாத் சரித்திரத்தில் ஏற்பட்ட பெரும் புரட்சியை சமஸ்தானத்தைப்பற்றி அறிந்திருப்பவர்கள்தான் உணரமுடியும். இரண்டு நூற்ருண்டுகளுக்குப்பிறகு பட்ட புரட்சியல்லவா! ஹைதராபாத் பிரஜைகள் இதர சமஸ்தான பிரஜைகளை விட அதிகமாய் நசுக்கப்பட்டு கிடந்தனரென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு நசுக்கப்பட்டிருந்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு புரட்சிக்காரர்களாக ஒரே நாளில் பொங்கி எழுந்தது இயற்கை.

சுருக்கமான இக்கட்டுரையில் ஹைதராபாதைப் போன்ற ஒரு பிரச்னையை பூராவும் விளக்குவது சாத்தியமில்லை. எனவே ஹைதராபாத் வெற்றியால் ஏற்பட்ட விளைவுகளை சுருக்கமாக எடுத்துக்காட்ட விரும்புகிருேம்.

1. வெற்றிமேல் வெற்றியடைந்துவந்த வகுப்புவாதத்துக்கு தோல்விமேல் தோல்வி கிடைத்துவருகிறது. முதல் தோல்வி காஷ்மீரிலும் இரண்டாவது தோல்வி ஹைதராபாத்திலும் கிடைத்தது. அத்துடன் வகுப்பு வாதிகளின் வீராப்புக்காலம் முடிவடைந்து விட்டது.

2. வகுப்புவாதிகளாக மாறி லாபமே லாபமடைந்துவந்த காலத்துக்கு முற்றுப்புள்ளி விழுந்து இன்று வகுப்புவாத வியாபாரத்தில் நஷ்டமே நஷ்டமேற்படும் காலம் வந்துவிட்டது.

3. ஹைதராபாத் பற்றி காங்கிரஸ் முஸ்லிம்கள் சொன்னது உண்மையென்று நிரூபணமாகிவிட்டது.

4. ஹைதராபாத்சரணுகதியால் பாகிஸ்தானுக்கு கிடைத்த அரசியல் தோல்வியாலும் இந்திய தலைவர்களின் தீர்க்க தரிசனத்தாலும் சர்ச்சில் கோஷ்டியார் திக்பிரமையடைந்து விட்டனர்.

5. இந்திய ராணுவத்தின் மின்னல் வேகத்தையும், திறமையையும் இதர வல்லரசுகள் தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்ததுடன் ஆசியாவில் பெருகிவரும் முதல்தர (ரஷ்யாவை தவிர்த்து) ராணுவ சக்தியைக் கண்டு அன்னிய பத்திரிகைகளும் அலறும்படியாய்விட்டது.

6. ஹைதராபாத் ராணுவ முஸ்தீப்புகள் குறித்து பத்திரிகைகள் மிகைப்படுத்தி செய்திகள் பிரசுரித்ததும், பத்திரிகைகளை பூரணமாக நம்புவதற்கில்லையென்பதும் வெளியாய்விட்டது. இதே பத்திரிகைகள் தான் முஸ்லிம் லீக், பாகிஸ்தான் பற்றி பிரமாதமாய் எழுதி முடிவில் பாகிஸ்தானையும் ஏற்படுத்தின. நவகாளி சம்பவங்களை கொட்டை எழுத்துக்களில் தலைப்புக் கொடுத்து பத்தி பத்தியாய் எழுதி நாட்டை கலவரத்தில் ஆழ்த்தின.

7 பாகிஸ்தானை பிரமாதமாய் எண்ணியிருந்தது போய் ஹைதராபாத் ஐந்து தினங்களில் முடிந்தால் பாகிஸ்தான் ஐந்தே வாரங்களில் முடியலாமென்ற உற்சாகம் இந்தியாவில் ஏற்பட்டு விட்டது.

8. ஹைதராபாத் வீழ்ச்சிக்குப்பிறகு காஷ்மீர் போர்முனையில் இந்திய ராணுவம் பலம் பெற்றதுடன் உற்சாகமும் அடைந்தது.

9. ஹைதராபாத் சரணுகதியால் இரண்டாவது போர்முனைபற்றியிருந்துவந்த அபாயம் அகன்று விட்டது.

10. ஹைதராபாத் அடைந்த கதியைப் பார்த்து இதர சமஸ்தானங்களும் இந்தியாவின் சக்தியை உணர்ந்து விட்டன

11. பிறந்து ஒருவருஷமும் நிறையாத ஒரு நாடு சாதித்த மாபெரும் சாதனையும் மக்களின் ஒரு முக மான ஆதரவையும் இந்தியர்களின் ஐக்கியத்தையும் பார்த்து உலகம் பிரமித்தது. இந்தியாவின் கவுரவம் உலகத்தில் உயர்ந்தது. இனி முஸ்லிம்களிடம் விஸ் வாசம் கோரவேண்டிய அவசியமில்லையென்று ஐக்கி யமாகாண பிரதமர் பண்டித கோவிந்த வல்லப பந்த் மெச்சும் விதத்தில் நடந்துகொண்ட இந்திய முஸ் லிம்கள் சர்தார் வல்லபாய்பட்டேலின் நன்மதிப்பை யும் பெற்றுவிட்டனர்.

மௌலானா அபுல்கலாம் ஆஸாத் கூறியுள்ளபடி ஹைதராபாத் விஷயத்தில் இந்திய முஸல்மான்களின் போக்கு இந்தியாவில் முஸ்லிம்களுக்கு நம்பிக்கை யுள்ள மஹத்தான எதிர்காலத்தை உருவாக்கியிருக்கி றது. முஸ்லிம் அனுதாபிகளென்று தூற்றப்படும் ஹிந்து தலைவர்களின் கைகளை பலப்படுத்தி வகுப்பு வாத ஹிந்துக்களின் வாயையுமடைத்து விட்டது. முஸ்லிம்கள் உண்மையாகவே துரோகிகளாயிருந்திருந் தால் இந்திய யூனியன் நடவடிக்கையில் இறங்கிய நேரத்தை விட துரோகம் செய்ய நல்ல சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைக்காதென்பது வெளிப்படை.

ஒளிவு மறைவின்றி கூறுமிடத்து ஹைதராபாத் தோல்வியை ஹைதராபாத் பிரச்னையை சிக்கலாக் கிவிட்டுப்போன லார்ட்மவுண்ட்பேட்டனின்தோல்வி யென்றே கூற வேண்டும். ஹைதராபாத் தாக்கப் பட்டால் பிரிவினைக்குப் பிறகு நடந்ததைப் போன்ற ரத்தக்களரி இந்தியா பூராவிலும் நடக்கு மென்றும் ஒரு பக்கத்திலே காஷ்மீர் இன்னொரு பக்கத்திலே ஹைதராபாத் இரண்டுக்கும் நடுவே அகப்பட்டுக் கொண்டு உள்நாட்டுக் குழப்பத்தால் இந்தியா திக்கு முக்காடிவிடுமென்றும் வெள்ளையர் நம்பியிருந்தனர். வெள்ளையர்கள்செய்த சூழ்ச்சிகள் அனைத்தும்இந்தியா வில்பலித்திருப்பினும் ஹைதராபாதில் மட்டும் வெள்ளை சூழ்ச்சிக்கு பலமான அடி கிடைத்துவிட்டது.

மனதுக்குள் பாகிஸ்தான் ஹைதராபாத் மோகத்தை மறைத்து வைத்துக்கொண்டு வார்த்தை அளவில் விஸ்வாசம் பேசி வந்த ஒரு சில இந்திய முஸ்லிம்கள்கூட ஹைதராபாத் வீழ்ச்சிக்குப் பிறகு விழிப்படைந்து தங்கள் நிலையை புனராலோசனை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

ஐக்கிய நாட்டு சபை.

பாலஸ்தீனத்தைப்போலவே ஹைதராபாத் பிரச்னையையும் தீராச்சிக்கல்களுக்கு உள்ளாக்கிவிட வாயைப் பிளந்துகொண்டு காத்துக் கொண்டிருந்த ஐக்கிய நாட்டு பந்தோபஸ்து சபைக்குகிடைத்த சரியான கவளத்தை நிஜாம் பிடுங்கிக்கொண்டார். ஆயினும் வாதியே தாவாவை வாபஸ்பெறுவதற்கு சம்மதிக்காத சாட்சிபோல் பந்தோபஸ்து சபை கூத்தடிப்பதால் ஒன்றும் நடந்துவிடப்போவதில்லை. ஹைதராபாத் பிரச்னையில் தலையிடபந்தோபஸ்து சபைக்கு சட்ட பூர்வமாக உரிமையில்லை.

அர்ஜண்டைனாவுக்கு எப்பொழுது நிஜாம் மோகம் பிடித்ததென்று தெரியவில்லை. ஹைதராபாத் மீது இந்தியா எடுத்த போலீஸ் நடவடிக்கை ஒரு சுதந்திர நாட்டின் மீது இன்னொரு சுதந்திர நாடு நடத்திய தாக்குதலாம்! நிஜாமையும், ரஜாக்கர்களையும் தான் நாடு என்று நினைக்கிறார் போலும்! நிஜாம் ஒரு தனி மனிதரென்று கூட அர்ஜண்டைனா பிரதிநிதிக்கு தெரியாமல் போய்விட்டது! இந்திய வெற்றிக்குப் பிறகு சமஸ்தானத்தின் ஒவ்வொரு குடிசையிலும் நெய்விளக்குகளை ஏற்றிவைத்த மக்களைக்குறித்து அந்த அப்பாவிக்கு எப்படி தெரியமுடியும்.

காலப்போக்கில் ஐக்கிய நாட்டு சபை சாம்ராஜ்ய லட்சியங்களைபலப்படுத்துவதற்காகநிறுவப்பட்டகுறிப் பிட்ட ஒரு கோஷ்டியினரின் கூட்டமென்பது தெளி வாகி வருகிறது. இந்தியா அதில் அதிக நாள்வரை இருக்கமுடியாது.

இனி என்னவாகும்?

ஹைதராபாத்தின் எதிர்காலம்தான் இனிசிந்திக்க வேண்டியவிஷயம். இந்தியாவின் மேலே கூறப்பட்ட சமரஸ நிபந்தனைகள் ஹைதராபாத் எதிர்காலத்துக்கு அஸ்திவாரமாகயிருக்காதென்பது வெளிப்படை. எப்படியிருப்பினும் இந்தியாவின் இதர மாகாணங் கள் போலவே ஹைதராபாத்திலும் பொறுப்பாட்சி ஏற்படுவது நிச்சயம். அதில் நிஜாம் வம்சத்தினரின் கவுரவங்கள் பாதுகாக்கப்படுமென்றும் நம்பலாம். காஷ்மீர் ஆட்சி ஷேக்அப்துல்லா விடம் ஒப்படைக் கப்பட்டிருக்கையில் ஹைதராபாத் ஆட்சியை நூற் றுக்கு எண்பத்தைந்து மக்களின் நம்பிக்கைக்கு பாத் திரமான ராமா நந்த தீர்த்தாவிடம் ஒப்படைப்பதே நியாயம்.

இன்றைய நிஜாமே நீடித்திருப்பதா அல்லது இளவரசர் ஆஜம்ஜாஹ் பட்டத்துக்கு வருவதாவென் பது பெரிய பிரச்னையல்ல. இனி யார் நிஜாமாயிருந் தாலும் அதனாலாகப்போவதொன்றுமில்லை. அதி காரம் சட்டசபையிடமும் மந்திரி சபையிடமுமே இருக்கும். ஆயினும் இந்திய சர்க்கார் அதிகாரிகளின்

பாபுஜி கனவு நனவாகுமா?

கிராம பஞ்சாயத்துக் குடியரசுகளை அடிப்படையில் கொண்ட இந்திய சர்க்கார் ஏற்படவேண்டுமென்பதே மஹாத்மா காந்திஜீயின் விருப்பம். கிராமங்களே இந்தியாவின் ஜீவநாடி. பெருவாரியான இந்தியர்கள் கிராமங்களிலேயே வசிப்பவர்கள். ஆயினும் நடைமுறையில் கிராமங்கள் மீது நகரங்கள் ஆதிக்கம் பெற்றிருந்தன. ஒரு காலத்தில் இந்தியா பொன் விளையும் நாடென விளங்குவதற்குக் காரணமாயிருந்த கிராம கைத்தொழில்கள் அனைத்தும் ஆங்கில ஆட்சியால் அழிந்தன. சுயதேவையைப் பூர்த்தி செய்து கொண்டு நகரங்களுக்கும் உதவிவந்த கிராமங்கள் உயிர் வாழ நகரங்களை எதிர்பார்க்க வேண்டிய நிலைமையை அடைந்தன. கிராமவாசிகள் நகரங்களில் குடியேறுவது நாளுக்குநாள் அதிகரித்தது அதனால் கிராமங்கள் சீர்குலைந்ததுடன் முதலிலிருந்தே சுப தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்குப் போதுமான வசதிகள் இல்லாமலிருந்த நகர வாழ்க்கை மேலும் பாதிக்கப்பட்டது. இதனால் இந்திய வாழ்க்கையே பொலிவிழந்து போயிற்று. கல்வி, நீதி, வைத்திய வசதி முதலிய எல்லா விஷயங்களிலும் கிராமங்கள் நகரங்களை எதிர்பார்க்கவேண்டிய நிலைமையிலிருப்பதையும் வெல்லம், சர்க்கரை, துணி முதலிய கிராமக்கைத்தொழில்கள் அழிந்து வருவதையும் மகாத்மாஜி கண்டார். கிராமங்கள் சீரழிவதின்றும் காப்பாற்றப்படாவிட்டால் நாடு முழுவதிலும் மோசமான நிலைமை ஏற்படுமென்பதை உணர்ந்தார். யுத்த காலத்தில் அதை பிரத்தியட்சமாக பார்த்தாய்விட்டது கிராமங்களிலிருந்து உணவுப்பொருள்களை நகரங்கள் வாங்கிக்கொண்டதால் கிராமவாசிகள் பட்டினி கிடந்து மடிந்தனர். கிராம கைத்தொழில்களின் நசிவால் உடை, சர்க்கரை முதலிய இதர வாழ்க்கைத் தேவைகளுக்காகத் தவித்தனர். கிராமக் கைத்தொழில்களில் ஏற்கெனவே சரியானபடி கவனம் செலுத்தியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. அத்துடன் கிராமக்கைத்தொழில் உற்பத்தியால் நகரங்களும் நன்மையடைந்திருக்க முடியும். இந்தியாவின் கிராம வாழ்க்கையும் பஞ்சாயத்து முறையும் புதிய அரசியல் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டிருந்தது. பெருங்குறையாகவே இருந்தது. அதனால் மஹாத்மா காந்திஜி கனவு கண்ட இந்தியாவை உருவாக்க விரும்பியவர்கள் உற்சாகமிழந்திருந்தனர். இன்று அந்தக் குறை அகற்றப்பட்டுவிட்டது, புதிய அரசியல் திட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் கிராமப்பஞ்சாயத்துகள் பற்றிய கொள்கையையொட்டி காரியங்கள் சரிவர நடந்தால் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் சக்தியை கிராமங்கள் பெறமுடியும் திரும்பவும் கிராமக் கைத்தொழில்கள் புத்துயிர் பெற்று உணவு, உடை முதலிய வாழ்க்கைத் தேவைகள் எவ்வித கஷ்டமுமின்றி கிராமவாசிகளுக்கு கிடைக்க முடியும் பிறகு கிராமங்களுக்கும் நகரங்களுக்குமிடையே எவ்வித வித்தியாசமும் நிலைக்காது போய் விடும்

யுத்தத்தினால் ஏற்பட்ட அளவற்ற அழிவுகளுக்குப்பிறகும் ஜப்பான் ஜீவித்திருப்பதற்கு கிராமக் கைத்தொழில்களே காரணம். கிராமங்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமே மஹாத்மா காந்திஜி கனவு கண்ட இந்தியாவை உருவாக்குவது சாத்தியம், அதில் சுபிட்சவாழ்க்கை நடத்தும் பொதுமக்களின் கையில் அதிகாரம் இருக்கும்.

இந்திய சர்க்கார் சட்ட மந்திரியான டாக்டர் அம்பேத்கார் புதிய அரசியல் திட்டத்தில் கிராம பஞ்சாயத்துகளுக்கு சுயராஜ்யத்தின் அடிப்படை உறுப்புகளென்ற அந்தஸ்தைக் கொடுத்து காந்திஜி கனவுகண்ட இந்தியாவை உருவாக்குவதற்கு அடிகோலியிருப்பதை வரவேற்கிறோம்.

ரிப்போர்டுகளைப் பார்த்தால் இளவரசர்களை விட நிஜாம் நல்ல புத்திசாலி யென்றே தெரிகிறது. ஆகையால் அவரே நீடித்திருப்பதுதான் விரும்பத் தகுந்ததாகும். நெருக்கடியான நேரத்தில் சரணாகதியடையும்படி தன் ராணுவத்துக்கு உத்திரவிட்டு மேலும் நஷ்டமேற்படுவதை புத்திசாலித் தனமாக தடுத்திருக்கிறார்.

நிஜாமின் அந்தரங்க சுத்திக்கு இன்னொரு உதாரணமுமுண்டு. சரணாகதியடைய உத்திரவிட்டதுடன் ஐக்கிய நாட்டு சபையிலிருந்த தாவாவையும் வாபஸ் வாங்கிக்கொண்டார். அவர் சரணாகதியடைந்த பிறகு தாவாவை வாபஸ் வாங்காமலிருந்திருந்தால் நிலைமை சிக்கலாகவேபோயிருக்கும் நிஜாமின் இச்செய்கையால் கடந்த பத்துமாதங்களாக நடந்த காரியங்களுக்கு நிஜாம் பொறுப்பாளியல்லவென்பதும் இந்தியராணுவம் சமஸ்தானத்தில் பிரவேசிக்கும் நிமிஷம்வரை அவர் மீது ஆதிக்கம் பெற்றிருந்த ஒரு காட்டுமிராண்டிக் கூட்டமே பொறுப்புயென்பதும் விளங்கிவிட்டது.

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது
"ஆஸாத்" விற்பனை செய்ய
ஏஜெண்டுகள் தேவை.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 6—12—'48 திங்கட்கிழமை { இதழ் 42

பாகிஸ்தான் பணிந்தது!

காஷ்மீரில் இந்தியாவின் தற்காப்பு நடவடிக்கைகளால் பாகிஸ்தான் தலைவர்கள் அலற ஆரம்பித்திருக்கின்றனர் ராணுவ நடவடிக்கைகளை இந்தியா நிறுத்தாவிட்டால் பாகிஸ்தானும் முழு பலத்துடன் பதிலுக்குத்தாக்க வேண்டியிருக்குமென்று ஸர்ஜபருல்லா பந்தோபஸ்து சபையில் மிரட்டுகிறார். கூடவே ஹைதராபாத் பிணத்தையும் அவர் தோண்டியெடுக்கப்பார்த்தது பலிக்கவில்லை. ஹைதராபாத் பிரச்னையை கால வரையறையின்றி பந்தோபஸ்து சபை ஒத்திப் போட்டுவிட்டது.

ஹைதராபாத் இந்தியாவின் சொந்த பிரச்னை. அதை சிறந்த முறையில் இந்தியா தீர்த்துக்கொண்டும் விட்டது. ஹைதராபாத்தைக் கட்டிக்கொண்டு இனி பாகிஸ்தான் எவ்வளவு புலம்பினாலும் இந்தியாவை ஒன்றும் செய்துவிடப்போவதில்லை. ஹைதராபாத் பிரச்னையை திரும்பவும் கிளப்பாமல் இருப்பதே பாகிஸ்தானுக்கு கௌரவம். இல்லையேல் காஷ்மீரில் பாகிஸ்தான் செய்த பித்தலாட்டம் உலகம் பூராவும் அம்பலமானதைப் போலவே ஹைதராபாத்தில் பாகிஸ்தான் செய்த சூழ்ச்சிகளும் அம்பலத்துக்கு வந்து மானம் பறிபோகவேண்டியிருக்குமென்பதை ஸர்ஜபருல்லா உணரவேண்டியதவசியம்.

கதைகள் கட்டிவிடுவது சுலபம். ஆனால் அதை நிரூபிப்பது கஷ்டமான காரியம் பாகிஸ்தானுக்கு ஜிந்தாபாத் போட்ட இந்திய முஸல்மான்களைப்போல் உலகம் அவ்வளவு ஏமாளியல்ல. பாகிஸ்தான் தலைவர்களுக்கு அறிவு இருந்தால் தங்கள் கடந்தகால செய்கைகளின் விளைவுகளைக்கொண்டே அவர்கள் விழிப்படைய முடியும்.

காஷ்மீர் இந்திய யூனியனில் ஒரு அங்கம். அதை பாதுகாக்கவேண்டியது இந்தியாவின் கடமை காஷ்மீர் இந்தியாவுடன்சேர முன்வந்தபோது. இருந்தநிலைமை உலகுக்குத் தெரியும். காஷ்மீரின் வேண்டுகோளை இந்திய சர்க்கார் அங்கீகரிக்கத் தவறியிருந்தால் காஷ்மீரை பாகிஸ்தான் ஆக்ரமித்து ஒரு வருஷம் முடிந்திருக்கும் அங்கிலையில முஸ்லிமல்லாதார் மட்டுமின்றி காஷ்மீரிலுள்ள தேசிய மஹாநாட்டைச்சேர்ந்த பெரும்பான்மை முஸ்லிம்கள் அனைவரும் ஷஹீத் மக்பூல் ஷெர்வானியைப்போல் கொல்லப்பட்டிருப்பர் அல்லது எல்லைப்புரத்து செஞ்சட்டையினர் சிறையில் கிடந்து வாடுவதைப்போல் சிறைக்குள் வாடிக்கொண்டிருப்பர். மஹாராஜாவின் அடக்குமுறை ஆட்சியையெதிர்த்து பதினேழு வருஷங்களாகப் போராடிய பல லட்சம் தேச பக்தர்களை காஷ்மீரின் வேண்டுகோளை ஏற்று இந்திய சர்க்கார் காப்பாற்றியிருக்கிறது இருப்பினும் இந்திய சர்க்கார் ஜனநாயகக் கொள்கையிலிருந்து இம்மியும் நழுவவில்லை படையெடுப்பாளர்கள் வெளியேற்றப்பட்ட பிறகு தங்கள் எதிர்காலத்தைக் குறித்து முடிவுசெய்யும் உரிமை காஷ்மீர்மக்களுக்கே உண்டு என்ற நிபந்தனையின் பேரிலேயே காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதை இந்திய சர்க்கார் அங்கீகரித்திருக்கிறது.

இந்திய சர்க்காரின் கண்ணியமான ஜனநாயக போக்கை கவுரவிப்பதை விட்டு தாக்குதலை தீவிரப்படுத்த மலை ஜாதியினருக்கு தளவாடங்களையும் இதர பொருள்களையும் பாகிஸ்தான் சப்ளை செய்யவாரம்பித்து விட்டது. பாகிஸ்தானின் சட்ட விரோதமான செய்கையால் போர் நீடிப்பதை தவிர்க்க பந்தோபஸ்து சபையில் பாகிஸ்தான் பேரில் இந்தியா புகார் தாக்கல் செய்தது.

காஷ்மீர் படையெடுப்பில் பாகிஸ்தானுக்கு சம்பந்தமேயில்லையென்றும் காஷ்மீர் சர்க்காருக்கெதிராக காஷ்மீர் பொது ஜனங்களே கிளர்ச்சி செய்கின்றனரென்றும் பந்தோபஸ்து சபையில் இதே ஜபருல்லா இந்தியாவின் குற்றச்சாட்டை மறுத்து வந்தார். படையெடுப்பாளரை வெளியேற்றுவதில் ஒத்துழைக்கத்தயாரென்றும் அதற்காக பாகிஸ்தான் படைகளை காஷ்மீருக்குள் அனுமதிக்கும்படியும் கூட கேடடார் ஆனால் இந்தியா அந்த வலையில் சிக்கவில்லை.

பந்தோபஸ்து சபை இந்தியாவின் குற்றச் சாட்டுக்களை புறக்கணித்துவிட்டு தீர்மானம் நிறைவேற்றியது. காஷ்மீரில் அமைதியை நிலைநாட்டி பொதுஜன வாக்கெடுப்பு நடத்துவதற்காக ஒரு கமிஷனை நியமித்தது. பந்தோபஸ்துசபையால் நியமிக்கப்பட்ட கமிஷன் இந்தியாவுக்கு விஜயம் செய்து இரண்டு டொமினியன்களுடனும் மாதக்கணக்கில் பேச்சுவார்த்தை நடத்தி காஷ்மீர் போர்முனைகளின் நிலைமையை நேரில் கண்டறிந்து திரும்பிச்சென்று காஷ்மீர் பிரச்னை பற்றிய பூர்வாங்க ரிப்போர்டை பந்தோபஸ்து சபையிடம்

ச்மர்ப்பித்திருக்கிறது. அதில் வெளியிடப்பட்டிருக்கும் கருத்துக்கள் பாகிஸ்தான் சிருஷ்டியான சுதந்திர காஷ்மீர் சர்க்கார் கபட நாடகத்தின் சாயத்தை வெளுக்க வைத்திருப்பதுடன் காஷ்மீர் போரின் முழுப்பொறுப்பையும் பாகிஸ்தான் மீதேசுமத்துகின்றன சுதந்திர காஷ்மீர சார்பில் போரிடும் படைகள் பாகிஸ்தான் தலைமையிலேயே போரிடுவதாலும் ஜம்முகாஷ்மீர் எல்லைகளுக்குள் பாகிஸ்தான் படைகள் நேரடியாக போரில் ஈடுபட்டிருப்பதாலும் பந்தோபஸ்து சபை தீர்மானத்தை நடைமுறையில் கொண்டுவர முடியாமல் போய்விட்டதென்று கமிஷன் எடுத்துக்காட்டியிருக்கிறது.

காஷ்மீர் பிரச்னையை சமாதானமான முறையில் தீர்க்க பிரச்னையை மீண்டும் காஷ்மீர் கமிஷனிடமே விடுவதென்றும்புதியசிக்கல்களை உண்டுபண்ணும் வகையில்ஒன்றுஞ்செய்யவேண்டாமென்று இந்தியா பாகிஸ்தான் டொமினியன்களைக் கேட்டுக்கொள்வதென்றும் பந்தோபஸ்து சபை தீர்மானித்திருக்கிறது இவ்விதம் பாகிஸ்தானைக் குற்றவாளியென்று தீர்மானித்த காஷ்மீர் கமிஷனிடமே திரும்பவும் காஷ்மீர் பிரச்னை ஒப்படைக்கப்பட்டதும் காலவரையறையின்றி ஹைதராபாத் பிரச்னை ஒத்திப் போடப்பட்டதும் பாகிஸ்தானுக்கு கிடைத்தபெரும் தோல்வியும் படைகளை வாபஸ் வாங்குவதில் பாகிஸ்தானுக்கு ஒருவித ஆட்சேபனையுமில்லையென்று ஸர்ஜபருல்லா இணங்கியது இந்தியாவுக் ந கிடைத்த வெற்றியுமாகும் படைகளை வாபஸ் பெற முன்னமே பாகிஸ்தான் இணங்கியிருந்தால் சச்சரவு இவ்வளவு தூரம் முற்றியிருக்க முடியாது.

படைகளை வாபஸ்பெற வேண்டிய கட்டம் வரும்போது பாகிஸ்தான் ஏதாவதொரு குருட்டு வாதத்தைக் கிளப்பாமலிருக்காதென்பது தெரியாமலில்லை. காஷ்மீர் வாக்கெடுப்பில் தலையிடவோ அல்லது இந்தியப்படைகளும் வாபஸாக வேண்டுமென்று வற்புறுத்தவோ கூடும். பொது ஜன வாக்கெடுப்பே நடப்பதாயிருந்தாலும் அதில் பாகிஸ்தான் தலையீட்டை எக்காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கலாகாது. எல்லையோரமாயுள்ள தளங்களிலிருந்து பாகிஸ்தானிகள் திடீரென்று தாக்கி காஷ்மீரை ஆக்கிரமித்துக்கொள்ளும்படியாக விட்டு விட்டு இந்தியா தன் படைகளை வாபஸ் பெற்றுக்கொள்வதற்கும் இணங்க முடியாது.

இந்தியா முடிவுசெய்திருப்பதை யொட்டித்தான் பொது ஜன வாக்கெடுப்பு நடக்குமேயல்லாது பாகிஸ்தான் விருப்பத்துக்கு இணங்கியல்ல. ஆகையால் வாக்கெடுப்புக்கு முன் பாகிஸ்தான் படைகளும் மலைஜாதியினரும் பரிபூரணமாக வெளியேறியாக வேண்டும். பிறகு வாக்கெடுப்புக்கு ஏற்ற சூழ்நிலை உண்டாக்கப்படவேண்டியிருக்கும். அதற்காக பாகிஸ்தான் தலைவர்களும் பத்திரிக்கைகளும் புனித யுத்தக் கூச்சல் போடுவதை நிறுத்த வேண்டியதவசியம். வாக்செடுப்புக்கு காஷ்மீர் சர்க்காரே ஏற்பாடுசெய்யும். ஐக்கியநாட்டுப் பிரதிநிதிகள் வெறும் பார்வையாளர்களாக இருப்பார்களே யொழிய எல்லா ஏற்பாடுகளையும் மேற்பார்வையிடும் உரிமை அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது. எந்த ரூபத்திலும் காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் தலையிட இடமளிக்கப்படமாட்டாது.

காஷ்மீர் போரால் பொருளாதாரத் துறையில் பாகிஸ்தான் பாபராகி விட்டது. ராணுவ பலத்தைக் கொண்டு காஷ்மீரை ஆக்கிரமிக்க முடியாதென்று பாகிஸ்தான் நிச்சயமாக உணர்ந்துவிட்டது. எனவே அரசியல் சூழ்ச்சிகள்செய்யும். நாம் ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ள வேண்டியதவசியம் பந்தோபஸ்து சபைக்கமிஷன் பாகிஸ்தானை குற்றவாளியென்று தீர்மானித்திருக்கிறது. அதைக்கருத்தில் கொண்டே நாம் எதையும் செய்ய வேண்டும் தற்காலீக போர் நிறுத்தத்துக்கு இந்தியா இணங்கவேண்டுமாயின் எவ்வித நிபந்தனையுமின்றி பாகிஸ்தான் படைகளை வாபஸ்பெற்று அகில காஷ்மீரையும் காஷ்மீர் சர்க்கார் ஆதிக்கத்தின்கீழ் விடவேண்டும். காஷ்மீரின் ஒரு அங்குல நிலத்தின் மீதும் பாகிஸ்தான் ஆதிக்கம் இல்லாமல் ஒழியவேண்டும். இதற்கு பாகிஸ்தான் இணங்க மறுத்தால் ராணுவ பலத்தைக்கொண்டு காஷ்மீரை மீட்பதைத் தவிர இந்திய சர்க்காருக்கு வேறு வழியில்லை. இந்திய சர்க்கார் இந்நிலையை பரிபூரணமாய் உணர்ந்திருக்குமென்று நப்புகிறோம்.

காஷ்மீரில் அடிபட்ட வீரர்கள் ஆஸ்பத்திரிகள் நிறைந்தன

எல்லா ஆஸ்பத்திரிகள் உள்பட ரெட் கிராஸ் ஆஸ்பத்திரியும் காஷ்மீர் போர் முனைகளில் காயம் அடைந்த சிப்பாய்களால் நிறைந்திருக்கின்றன. அவர்களில் அநேகர் படுகாயமடைந்திருக்கின்றனர். ராவல் பிண்டியிலுள்ள சினி ஹேம் ஆஸ்பத்திரியும் கூட ஆஸாத் காஷ்மீர், பாகிஸ்தான் ராணுவத்தினரால் நிறைந்து விட்டது. பேகம் ஷஹாபுத்தீனும், பேகம் ஹாரூனும் ஹோலி பேமலி ஆஸ்பத்திரிக்கும் விஜயம் செய்தனர். அங்கும் காயமடைந்த ராணுவத்தினா சேர்க்கப்படுகின்றனர் இதர ஆஸ்பத்திரிகளும் இதே நிலைமையில்தானிருக்கின்றனவென்று பேகம் ஷஹாபுத்தீன் தலைமையில் ராவல் பிண்டிக்குப் போயிருந்த கராச்சி பெண்கள் முஸ்லிம் லீக் தூதகோஷ்டி, அறிவிப்பதாக பாகிஸ்தான் சர்க்காரின் விளம்பர இலாகா அறிவித்திருக்கிறது.

— ஊழியர்களுக்கு ஸர்தார் உபதேசம். —

ஐக்கிய மாகாண காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் ஸர்தார் வல்லபாய் படேல் சொன்ன புத்திமதி நாட்டிலுள்ள காங்கிரஸ் ஊழியர்கள் அனைவருக்குமேயாகும். ஸர்தார் பட்டேல் இந்தியாவின் உதவிப் பிரதமரென்ற ஹோதாவில் பேசவில்லை. காங்கிரஸின் தலைசிறந்த தலைவரென்ற முறையில் ஒளிவு மறைவின்றி உள்ளதை உள்ளபடி வெளியிட்டு விட்டார். கடமையைத் தட்டிக் கழித்துவரும் சிலருக்கு அது பிடிக்காமலிருக்கலாம். அதைக் குறித்து ஸர்தார் கவலைப்படுபவரல்ல.

விடுதலைக்குப் பிறகு காங்கிரஸ் வேலைகள் அப்படியே ஸ்தம்பித்துவிட்டன. லட்சியம் கைகூடிவிட்டதென்று ஊழியர்கள் நினைத்துவிட்டதே அதற்குக் காரணம். இந்தியர்களின் அறிவு, அரசியல், பொருளாதாரத்தில் நிலவும் அடிமைத்தனம் அகன்று, அன்னிய ஆட்சியில் ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தைக் கசக்கிப் பிழிந்து வந்த சுரண்டல் ஒழிந்து, உண்ண உணவும், உடுக்கத் துணியும், இருக்க இடமும கிடைத்து சரிநிகர் சமானமாக சுதந்திர சூழ்நிலையில் வாழ்வதாக மக்கள் உணர்வதுதான் சுதந்திரமேயல்லாது அன்னியர்கள் வெளியேறிவிடுவது மட்டும் சுதந்திரமல்ல.

"காங்கிரஸ் ஊழியர்கள் மஹாத்மா காந்திஜீயின் வழியிலிருந்து நழுவிவிட்டனர். சத்திய வழியில் நடந்து தீமைகளை எதிர்ப்பதற்கு பதிலாக பரஸ்பர சச்சரவில் இறங்கிவிட்டனர். தங்கள் மாகாணத்துக்கும் நாட்டுக்கும் எந்த அளவுக்கு நன்மை செய்திருக்கிறோமென்று காங்கிரஸ் ஊழியர்கள் தங்கள் நெஞ்சில் கையை வைத்து பார்க்கட்டும்" என்று ஸர்தார் பட்டேல் கடுமையாகப் பேசியதிலுள்ள உண்மையை யாராலும் மறுக்கமுடியாது. காந்திஜீ உயிருடனிருந்திருந்தால் இதைவிடக் கடுமையாகப் பேசியிருப்பாரென்பது நிச்சயம்.

அந்தரங்கசுத்தியுடன் குறைகளைச் சுட்டிக்காட்டுபவர்களைக்கூட சிலர் காங்கிரஸின் எதிரிகளென்று பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிடுவது துரதிர்ஷ்டமாகும். காங்கிரஸின் எதிரிகள் எடுத்துக் காட்டும் குறைகளையும் கேட்டு நம்மிடமுள்ள குறைபாடுகளையும் பலஹீனங்களையும் உணர்ந்துதிருந்துவதற்கு அவசியமான உணர்ச்சி நம்மிடமிருக்கவேண்டும். சர்தார் பட்டேல் காங்கிரஸின் எதிரியல்ல. காங்கிரஸின் தலைசிறந்ததலைவர். சுற்றுமுற்றுமுள்ள அவநம்பிக்கை அளிக்கத்தக்கநிலைமையைப்பார்த்துஉண்மையான காங்கிரஸ்காரர் என்ற முறையில் மனவேதனையடைந்து உண்மையைஎடுத்துச் சொல்லாமல் அவரால் இருக்கமுடியவில்லை. காங்கிரஸ் கமிட்டி பதவிகள், முனிஸிபாலிடி, ஜில்லா போர்டு ஸ்தானங்கள், வியாபார பர்மிட்கள், லைசென்ஸுகள் விஷயத்தில் தங்களுடைய நேரத்தையும் திறமையையும் அநேக காங்கிரஸ் ஊழியர்கள் வீணாக்கிவருவதை மறுக்கமுடியுமா? விடுதலைக்குப் பிறகு ஏற்பட்ட பொறுப்புக்களில் கவனம் செலுத்தாமல் அல்ட்சியமாயிருப்பதை அவர்கள் இல்லையென்று சொல்லமுடியாது.

சில சுயநலக்கார விவசாயிகள் பதுக்கல் பேர்வழிகளின் போக்கால் நாட்டில் ஏற்கெனவேயுள்ள உணவு நிலைமை மேலும் மோசமடைந்து பொதுமக்கள் அமைதியிழப்பதால் ஏற்படக்கூடிய நிலைமைக்குப் பொறுப்பேற்கவேண்டியர்கள் யார்? "காங்கிரஸ் ஊழியர்கள் கிராமங்களுக்குச் செல்லவேண்டும். உபரி தானியத்தை விற்பனை செய்ய விவசாயிகளைத் தூண்டவேண்டும். நேர்மையற்ற முறையில் உணவுப் பொருள்களை பதுக்கி வைத்து மக்களை வாட்டி வதைக்கும் கள்ள மார்க்கெட்காரர்களைப் பிடித்து சட்டத்தினிடம் ஒப்படைக்கவேண்டும். இல்லையேல் உலகத்தின் எந்த சக்தியும் நாட்டை அழிவினின்றும் காப்பாற்ற முடியாது" என்று சர்தார் பட்டேல் கூறியது முற்றிலும் உண்மை.

துணிப் பிரச்னையும் முக்கியமான பிரச்னையாகும். நாட்டுப் பிரிவினையால் பருத்தி உற்பத்தியாகும்பெரும் பகுதிப் பிரதேசம் நம் கையைவிட்டுப் போய்விட்டது. பருத்தியை உற்பத்தி செய்ய விவசாயிகளை தூண்டவேண்டும். குறைந்த பட்சம் ஏழைகளுக்கு மலிவான விலையில் துணியாவது கிடைக்கும்படிச் செய்ய ஒவ்வொரு வீட்டிலும் ராட்டின இயக்கம் ஆரம்பிக்கவேண்டும் குடிசைத் தொழிலை அபிவிருத்தி செய்வதும் கிராமத் கைத்தொழிலுக்கு ஆர்வமளிப்பதும் காங்கிரஸ் ஊழியர்களின் கடமையாகும். விவசாயிகள் தொழிலாளிகள் விஷயத்தில் காங்கிரஸ் அதிக கவனம் செலுத்தவில்லையென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களைக் காங்கிரஸுக்கு எதிரான சக்திகள் ஆக்ரமித்து வருகின்றன. மஹாத்மா காந்திஜி கனவு கண்ட சுதந்திர சுபிட்ச நவ இந்தியாவை உருவாக்குவது காங்கிரஸின் லட்சியமானால் தொழிலாளிகள் விவசாயிகளை ஒருமுகப்படுத்தி அவர்களுக்கு இருந்துவரும் குறைகளைத் தெரிந்து அதைப் பரிகரிக்கும் வேலையில் காங்கிரஸ்

சென்னை

ஜனூப் ஹாஜி M. அப்துர் ரஹ்மான் சாஹிப்

.... அவர்களுக்கு ....

நன்றி செலுத்துகிறோம்.

குறுகிய காலத்திற்குள் அரசியல் உலகத்தில் 'ஆஸாத்' குறிப்பிடத் தகுந்த தன் போக்கால் பொதுஜன கவனத்தைக்கவர்ந்திருப்பினும் பொருளாதாரத் துறையில் பல கஷ்டங்களை எதிர்நோக்கும் நிலைமையிலேயே இருந்தது. 'ஆஸாத்' அன்பர்களின் உதவியைப் பன்முறை நாடினோம். அச்சிடுவதற்குச் சொந்தமான ஒரு அச்சுக்கூடம் அவசியமாயிருக்கிறது. குறைந்தபட்சம் 16,000 ரூபாயாவது தேவை. சென்ற வாரம் ஆலிஜனூப் ஹாஜி M. அப்துர்ரஹ்மான் சாஹிப் அவர்களை 'ஆஸாத்' ஆசிரியர் அணுகினார். இதற்கு முன் கொடுத்த நன்கொடை மட்டுமின்றி மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் சந்தாவும் அளித்துவந்த ஹாஜி சாஹிப் ஐந்து வருஷ சந்தா தொகையான 6,000 ரூபாயை முன்கூட்டியே கொடுத்துவிடுவதாக வாக்களித்திருக்கிறார். அச்சுக்கூடம் விலையாடிக் கொண்டிருக்கிறது. பாக்கியுள்ள தொகையையும் 'ஆஸாத்' அன்பர்கள் கொடுத்துதவுவார்களென்று நம்புகிறோம். ஆரம்பத்திலிருந்து நம் சேவையைப் பாராட்டி உதவி வந்ததுடன் பெருந்தொகையை அளித்து 'ஆஸாதை' ஸ்திரப்படுத்த முன் வந்த ஆலிஜனூப் ஹாஜி M. அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களுக்கு 'ஆஸாத்' நன்றி செலுத்துகின்றது. எல்லாம் வல்ல இறைவன் அன்னாரை தேச நலனுக்காக நீண்ட ஆயுளைக் கொடுத்து திடகாத்திரத்துடன் வைப்பானாக!

டுணையவேண்டும். இல்லையேல் காங்கிரஸ் ஊழியர்கள் செல்வாக்கிழந்து தேசம் பலத்தை இழந்துவிடும்.

கள்ள மார்க்கெட்டையும் லஞ்ச ஊழல்களையும் தடுக்க பலமான இயக்கம் துடங்காவிட்டால் ஊதியம் பெற்று உழைப்பவர்கள் ஊதியத்தை அதிகரிக்க வேண்டுமென்று கோரவே செய்வர். அதனால் காகிதக் கரன்ஸியின் செலாவணி பெருகி நாட்டின் பொருளா அமைப்பே தகர்ந்துபோக வேண்டியிருக்கும். தேசத்தை அவ்வித அபாயத்திலிருந்து காப்பாற்ற காங்கிரஸ் ஊழியர்களைத் தவிர வேறுயார் முன்வரப் போகிறார்கள்.

ஒரு சில தலைவர்கள் மீது முழுபொறுப்பையும் சுமத்தி விட்டு அவர்களுடைய பெயரைச் சொல்லி நாட்டை எதிர்நோக்கும் அபாயங்களை எல்லாம் சமாளித்து விட முடியுமென்று காங்கிரஸ் ஊழியர்கள் நினைப்பது தவறு காங்கிரஸும் காங்கிரஸ் ஊழியர்களும் மனப்பூர்வமாக ஒத்துழைத்தால் மட்டுமே பண்டிதநேரு சர்தார்பட்டேல், மௌலானா ஆஸாத், பாபூ ராஜேந்திரபிரசாத் போன்ற தலைவர்கள் நாட்டை முன்னேற்ற முடியும் எவ்வளவுதான் அந்தரங்க சுத்தியிருப்பினும் பெரும் தலைவர்கள் தன்னந்தனியாக ஒன்றுஞ்செய்துவிட முடியாது.

இன்று சீனாவை கண்கூடாகப் பார்க்கிறோம். ஜெனரல் சியாங்கே ஷேக்கும் அவரது சகாக்களும் அந்தரங்க சுத்தியிருந்தும்கூட தோல்வி யடைந்து வருகின்றனர். சீனா வாழ்வதா சாவதா என்ற போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றது. சீனாவின் நிலைமையிலிருந்து காங்கிரஸ் ஊழியர்கள் படிப்பினை கற்க இன்னும் அவகாசமிருக்கின்றது.

கிழக்கு வங்க முஸ்லிமல்லாதார்

வாய்ப் பேச்சு பயனளிக்காது.

சில தினங்களுக்குமுன் டாக்கா விஜயம் செய்த பாகிஸ்தான் பிரதம மந்திரி நவாப் ஜாதா லியாகத் அலி கான் நீண்டதொரு பிரசங்கம் செய்தார். “பாகிஸ்தானில் எல்லா மதத்தினர், நிறத்தினர், ஜாதியினரும் நிம்மதியுடன் சுகமாக இருப்பரென்று தன் வாழ்நாட்களில் காயிதே ஆஜம் முஹம்மத் அலி ஜின்னு பலமுறை அறிவித்திருக்கிருர். சிறுபான்மையினர் உரிமைகளை பாதுகாப்பது முஸ்லிம்களின் கடமை. பாகிஸ்தான் இஸ்லாமிய ஆட்சியென்பதைக் கேட்டு முஸ்லிமல்லாதார் ஏன் பீதியடைகிருர்களென்று எனக்குப் புரியவில்லை. பாகிஸ்தான் சர்க்காரும் தலைவர்களும் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டிருப்பரென்று நான் பன்முறை உறுதியளித்திருக்கிறேன். இஸ்லாம் சகலருடனும் நியாயமாகவும் சமத்துவமாகவும் நடந்துகொள்ளவே போதிக்கின்றது. இதைவிட சிறந்தகொள்கையுள்ள ஒரு நாட்டை உலகம் பூராவிலும் காட்டும்படி கேட்கிறேன். இஸ்லாமியக்கொள்கை அடிப்படையில் அமைந்திருக்கும் பாகிஸ்தானில் முஸ்லிமல்லாதார் பாதுகாப்புடனும், நேர்மையுடனும் நடத்தப்படுவரென்று நான் உறுதி கூறுகிறேன்.” என்று பேசினுர்.

சில காரணங்களால் கிழக்கு வங்க ஹிந்துக்களின் ஒரு வர்க்கத்தினருக்கு ஏற்பட்டிருக்கும் பீதியை பாகிஸ்தான் பிரதம மந்திரியின் உறுதிமொழிகள் ஆறுதலளிக்கக் கூடுமென்பது வான்தவந்தான்.

சிறுபான்மையைப் பாதுகாப்பது பாகிஸ்தான் சர்க்காரின் கடமை அப்படியிருக்க தான் கடமைப்பட்டிருக்காத ஒன்றைச்செய்து சிறுபான்மையினருக்கு ஏதோ உபகாரம் செய்யப்போவதுபோல் லியாகத் அலிகான் பேசும் தோரணையை எந்தஒரு சுயமரியாதையுள்ள ஹிந்துவும் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

சிறு பான்மையினர் பெரும் பான்மையினரின் தாராள மனப்பான்மையைக் கேட்கவில்லை. தங்களுடைய நியாயமான உரிமைகளையே கேட்கின்றனர். பிரஜைகள் என்ற முறையில் அவர்களுடைய நியாயமான உரிமைகளை பாதுகாப்பது பாகிஸ்தானின் கடமை. பாகிஸ்தானில் சட்ட பூர்வமாக சிறுபான்மையினருக்கு எவ்வித சலுகைகளும் அளிக்கப்படவில்லை. நடைமுறையில் சிறுபான்மையினர் பலகஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. மேற்கு பாகிஸ்தானில் நடந்தது எவ்வளவுதான் வெட்கப்படத் தகுந்ததெனினும் குறிப்பிட்டதொரு கலவர காலத்தில் நடந்த சம்பவங்கள் என்பதற்காக வேண்டுமானுல் மன்னிக்கவும் முடியும் ஆனுல் கிழக்குவங்கத்திலிருந்து பெரும் அளவில் ஹிந்துக்களின் வெளியேற்றம், சிறுபான்மையினர் விஷயத்தில் பாகிஸ்தான் தன் கடமையை செய்யவில்லை யென்பதையே காட்டுகிறது. இதுவருந்தத்தக்க விஷயமாகும்.

கிழக்கு வங்கத்திலிருந்து ஹிந்துக்கள் வெளியேறுவதற்கு பொருளாதார காரணங்கள் மட்டுமின்றி அரசியல் காரணங்களுமிருக்கத்தான் செய்கின்றன. இந்தியாவை ஹிந்து ராஜ்யம் என்று சொல்லுவதால் இங்குள்ள முஸ்லிம்கள், இதர சிறுபான்மை வகுப்பினர் பீதியடைவதைபபோலவே பாகிஸ்தான் தலைவர்கள் இஸ்லாமிய ஆட்சியென்று அடிக்கடிபோடும் கூச்சல் முஸ்லிமல்லாதாரிடையே பீதிஉண்டாக்குவது இயற்கை. லியாகத் அலிகான் அதை தெளிவுபடுத்த முயலுவதால் பலன் ஒன்றும் ஏற்படமுடியாது.

இஸ்லாமிய சட்டங்கள் எவ்வளவுதான் நியாயமாக இருப்பினும் அதனுல் முஸ்லிம் அல்லாதார் திருப்தியடைவது சாத்தியமில்லை. ஹிந்து தர்மம் யாருடனும் அநியாயமாய் நடக்க போதிக்கவில்லை மிருகங்களையுப்கூட ரட்சிக்கவே சொல்லுகின்றது இந்தியாவில் ஹிந்து ராஜ்யம் அமையும் அதில் முஸ்லிம்கள் நியாயமாய் நடத்தப்படுவரென்று இந்தியாவிலுள்ள ஹிந்துக்களின் உறுதிமொழிகளால் முஸ்லிம்கள் திருப்தியடைந்துவிட மாட்டார்கள், நாட்டின் நிர்வாகத்திலும் விதியை நிர்ணயிப்பதிலும் தங்களுக்கும் சமஉரிமை வேண்டுமென்றே முஸ்லிம்கள் கேட்பர். கிழக்கு வங்கத்தில் ஹிந்துக்கள் கேட்பதும் அதுதான்.

கவுரவத்தடன் சுகமாக வாழ்வதற்கு பெரும்பான்மையினரின் தாராளமும் சகிப்புத்தன்மையுமே போதுமென்ருல் முஸ்லிம் லீக் பாகிஸ்தான் ஏற்படுத்தியது ஏன்? என்று கேட்காமலிருக்க முடியாது. பெரும்பான்மை ஹிந்துக்களின் கீழ் இருக்கவிரும்பாததும் சரிசம உரிமைகள் கிடைக்க முடியாதென்ற அவநம்பிக்கையுமே பாகிஸ்தான் ஏற்படுத்தியதின் காரணமல்லவா? இந்நிலையில் கிழக்குவங்க ஹிந்துக்கள் மாத்திரம் தங்கள் தாய்நாட்டிலேயே அன்னியர்களாகவும் விருந்தினர்களாகவும் இருக்கசம் மதிப்பரென்று லீக் தலைவர்கள் எப்படி எதிர்பார்க்கின்றனர்? வங்காளத்தில் லியாகத் அலிகானுக்கு உள்ள உரிமையைவிட அதிகமானஉரிமை அங்குள்ள முஸ்லிமல்லாதாருக்கு உண்டு.

எனவே கிழக்குவங்க முஸ்லிமல்லாதார் நிம்மதியுடன் இருந்துவர வேண்டுமென்பது பாகிஸ்தான் பிரதமரின் விருப்பமானுல் எல்லாத் துறைகளிலும் முஸ்லி மல்லாதாருக்கு சரிசம உரிமைகளைக் கொடுத்து பாகிஸதானை. மத அடிப்படையற்றதொரு ஜனநாயக நாடாகச்செய்ய முயலவேண்டியதவசியம்.

விசித்திரப் புரட்சிகள்.

○ ○ ○

சுதந்திரம் கிடைத்ததால் இரண்டு வருஷங்களில் நாட்டில் நடந்தேறிய புரட்சிகள் அநேகம். அவற்றில் மஹத்தானது நம்தலைவர்களின் நிலையில் ஏற்பட்ட பெரும் புரட்சி தான். ராஜாஜி, பண்டிதநேரு, சர்தார் பட்டேல், மௌலானா ஆஸாத் முதலியவர்கள் போன்ற நேற்றுவரை சிறைக்கூடங்களில் அடைபட்டுக்கிடந்தவர்கள், இன்று அதிகார பீடங்களில் காட்சியளிக்கின்றனர். ஸைமன் கமிஷன்விஜயத்தின் போது போலீஸ்காரன் குண்டாந்தடியை சுவைத்தவர் இன்று இந்தியாவின் பிரதம மந்திரி சார்ஜண்டின் குதிரைக் காலடியால் மிதிபட்ட பேர்வழி ஐக்கிய மாகாண பிரதம மந்திரி. இருப்பினுமென்ன? இதைவிடக் குறிப்பிடத்தகுந்த புரட்சிகளும் இல்லாமல் போய்விடவில்லை, பொது ஜனங்கள் அவற்றில் கவனம் செலுத்துவதில்லையென்றாலும் அவை விசித்திரமான புரட்சிகளென்பதை மறுக்க முடியாது.

———

சென்னை மாகாண மாஜி பிரதமரும் அரசியல் நிர்ணய சபையின் பிரபல அங்கத்தினருமான மிஸ்டர் பிரகாசம் காரு சமீபத்தில் இதே போன்றதொரு புரட்சியை ஜாடையாக சுட்டிக்காட்டினார். இந்திய அரசியல் திட்டக்கமிட்டியின் தலைவரான டாக்டர் அம்பேத்கார் என்ற பெரியார் வாழ்க்கைப் பூராவும் காங்கிரஸை எதிர்த்து வந்தவர். காலஞ்சென்ற மிஸ்டர் ஜின்னாவுக்கு அடுத்தாற்போல் மிஸ்டர் சர்ச்சிலின் பரிபூரண அன்புக்கு பாத்திராயிருந்தவர். காங்கிரஸ் மந்திரி சபையில் மெம்பரா யிருந்துகொண்டே காங்கிரஸுக்கு எதிராக நீண்டதொரு பிரசங்கம் செய்த காங்கிரஸை 'எரியும் வீடு' 'மூழ்கும்படகு' என்றெல்லாம் நாமகரணம் சூட்டியவர். ஆனால் இந்தியாவின் அரசியல் திட்டத்தை தயாரித்துக் கொண்டிருக்கிறார். நாட்டின் விடுதலைக்காக முப்பது வருஷங்கள் வரை சிறைக்கூடங்களில் கிடந்துவாடியவர்களுக்கு கிடைத்தது எதிர் கட்சியின் வேலை! அல்லது குறைகளை சுட்டிக்காட்டுபவர்களின் கடமை! எவ்வளவு விசித்திரமான புரட்சி!

———

கோபாலசாமி அய்யங்கார் காஷ்மீர் பிரதிநிதியாக ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் வாதிக்கும் போதும் காஷ்மீர் சுதந்திரக் கொண்டாட்டத்தில் ஷேக் அப்துல்லாவுடன் தோளோடு தோள் நின்று கலந்து கொள்ளும்போதும் புரட்சியின் இன்னொரு விசித்திரமான தன்மை வெளிப்படுகின்றது. பொது ஜனங்களுக்கு இம்மாதிரியான விஷயங்கள் பொதுவாக நினைவிருப்பதில்லையாயினும் பெரிய மனிதர்களும் குறிப்பாக அதில் சம்பந்தப்பட்டவர்களும் அதை மறந்து விடுவதில்லை. ஆகையால் மிஸ்டர் கோபாலசாமி அய்யங்காரும் ஷேக் அப்துல்லாவும் ஏதாவதொரு தேசீய விழாவில் ஒருவரையொருவர் சந்திக்கும் போது அவர்களுடைய உள்ளத்தில் விசித்திரமான உணர்ச்சிகள் ஏற்படாமல் போகுமா! மிஸ்டர் அய்யங்கார் காஷ்மீர் பிரதமராகஇருந்ததும் ஷேக் அப்துல்லா சுதந்திரப்போராட்டத்தை நடத்தியதும் மிஸ்டர் அய்யங்கார் ஷேக் அப்துல்லாவை கைது செய்து சிறைக்குள் தள்ளி தேசீய மஹாநாட்டை அபாயகரமான ஸ்தாபனமென்று தீர்மானித்து தடைவிதித்ததும் நினைக்காமல் போவார்களா! தனிப்பட்ட முறையில் சந்திக்கும்போது பழைய விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசுவார்களா? இல்லையா? வென்பது அவர்களைக் கேட்டால்தான் தெரியும்.

———

இதே போன்ற புரட்சிகாமான ஒரு சந்திப்பு. இன்று பாரீஸில் ஸர் ஜபருல்லாவுக்கும் கிர்ஜா ஷங்கர் பாஜ் பாயுக்குமிடையே நடந்துகொண்டிருக்கிறது ஒருகாலத்தில் இவ்விரண்டு பெரியார்களும் வைஸ்ராய் நிர்வாக கவுன்ஸில் மெம்பர்களாய் இருந்தபோது காங்கிரஸின் சுதந்திரக் கிளர்ச்சியை நாட்டுக்கு அபாயகரமானதென்று முடிவுசெய்து காங்கிரஸ் தலைவர்களை கைது செய்திருந்தார்கள். பிறகு பிரிட்டிஷ் ஆட்சி இவர்களிடம் இரண்டு முக்கியவேலைகளை ஒப்புவித்து மிஸ்டர் கிர்ஜா ஷங்கரை அமெரிக்காவில் இந்திய எஜெண்ட் ஜெனரலாகவும், ஸர் ஜபருல்லாவை சைனாவுக்கும் அனுப்பியிருந்தது. இருவரும் தங்கள் வேலையை திறமையுடன் செய்து பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதித்துவத்தை நல்லமுறையில்நிறைவேற்றினார்கள் இன்று விதிவசத்தால் இருவரும் மீண்டுமொரு முறை சர்வதேச ஸ்தாபனத்தில் சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆனால் நண்பர்கள் என்ற முறையிலல்ல. எதிரிகள் என்ற முறையில். என்னே! காலமாறுதல்.

———

இன்னொரு விசித்திரமான சம்பவம் காஷ்மீரிலிருந்து காஜா அஹ்மத் அப்பாஸ் அனுப்பியிருக்கிறார்.

ஜம்மு பாகிஸ்தான் எல்லைகளைப்பிரிப்பது முள்வேலிதான். இரு நாடுகளுக்கிடையே தந்தி, டெலிபோன் தொடர்பு கூட இல்லை. ஜம்மு பாகிஸ்தான் எல்லைகளில் முறையே ஒவ்வொரு கம்பமிருக்கிறது, இடைவெளியில் பாதிவரை ஜம்மு எல்லைக்கம்பத்தின்

அறிவிப்பு.

என் மைத்துனர் காரைக்குடி பழ. திருப்பதி செட்டியார் என்பவர் தான் ஒரு தொழில் செய்யவேண்டி தனக்கு வசதியில்லாததாலும் தன் பெயருக்கு பல கோர்ட் நடவடிக்கைகள் இருப்பதால் தன் பெயருக்கு தொழில் நடத்த முடியாததாலும் என் பெயருக்கு ஒரு தொழில் ஆரம்பித்து என்னை பண உதவி செய்யும்படியும் பிறகு தனக்கு எந்த பணம் வந்தாலும் உடனே திருப்பித்தருவதாக சம்மதித்து திருவிடமருதூரில் ரோஸ் கன்பெக்ஷனரி ஒர்க்ஸ் என்ற பெயரால் ஆரம்பித்து பண உதவி செய்து இயந்திரங்கள் இதர சாமான்கள் வாங்கி தொழில் ஆரம்பிக்காமல் மேலும் மேலும் பணம் கேட்டு தொந்தரவு செய்தார். மேலும் பணம் கொடுக்க முடியாதென்றும் இடத்தைக் காலி செய்து சகல சாமான்களையும் கும்பகோணம் அதெ. மு. தெ. மு. விடம் ஒப்புவிக்கும்படி எழுதியும் அதன்படி செய்யாமல் ஷெயார் இடத்தைக் காலி செய்து சாமான்களை எங்கோ அப்புறப் படுத்தி இருப்பதாக தெரிகிறது. ஷெ சாமான்களை ஷெ பழ. திரு. விற்கவோ அடமானம் வைக்கவோ ஷெ கம்பெனி பேரில் கடன் வாங்கவோ, அதிகாரமில்லை. மேற்கண்டபடி ஷெயார் செய்திருந்தாலும் இனிமேல் செய்தாலும் என்னைக் கட்டுப்படுத்தாது என்பதை இதன் மூலம் அறிவிக்கிறேன்.

இப்படிக்கு,
மெ வி. மெ. மெய்யப்ப செட்டியார்,
பாங்கர், காரைக்குடி.
பிராஞ்ச்: கும்பகோணம் & கொளும்பு,
2—12—48

ஹைதராபாத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் துர்கதி.

ஜமீயத்துல் உலமா வேண்டுகோள்.

பம்பாய்,
27—11—48.

பம்பாய் மாகாண ஜமீயத்துல் உலமாவின் நிவாரணக்கமிட்டி விடுத்திருக்கும் வேண்டுகோளில் இந்தியாவிலிருந்து வெளியேறி ஹைதராபாதில் குடியேறி இன்று மீண்டும் வெளியேற்றப்பட்டிருக்கும் (ஹைதராபாதிலிருந்து) பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களின் தாங்கொணாத் துன்பங்களைப்போக்க முயற்சி எடுக்கும்படி இந்திய சர்க்காரையும் இந்தியப் பிரதம மந்திரியையும் விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறது.

துரதிர்ஷ்டசாலிகளான இவர்கள் தவறான நம்பிக்கையில் ஹைதராபாத் சென்று குடியேறி இருந்தனர். இன்று தினமொன்றுக்கு நூற்றுக்கணக்கானவர்களை வெளியெற்றப்படுகிறது. துர்க்கதியான நிலைமையில் பம்பாய் வந்து சேருகின்றனர். அவர்களில் பெரும்பான்மையினர் ஆள்வார், பரத்பூர் சமஸ்தானங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றனர். அவர்கள் நிர்ப்பந்தமான நிலைமையில் வீடுகளைவிட்டு வெளியேற வேண்டியிருந்தது. இன்று அவர்கள் அங்கு திரும்பிச் செல்லுவதற்கில்லை. திடுக்கிடத்தக்க முறையில் அவர்கள் உள்ளே நுழையக்கூடாதென்று பாகிஸ்தானும் தடுத்திருக்கிறது.

இவர்கள் அனைவரும் இந்தியர்கள். இந்தியர்களாகவே இருக்கப்போகின்றனர். வீடு வாசல்களை இழந்து பரதேசிகளாய் விட்ட துரதிர்ஷ்டசாலிகளை குடியேற்றுவதற்கு ஏற்பாடு செய்யும்படி அரசாங்கத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இவர்களுக்காக அகதி முகாம் ஒன்று உடனடியாக அமைக்கப்பட வேண்டியதவசியம். அதன் பிறகு நிரந்தரமான திட்டங்கள் வகுத்துக்கொள்ளமுடியும்

முள் கம்பிகளும் மறுபாதியில் பாகிஸ்தான் கம்பத்தின் முள்கம்பிகளும் தொங்குகின்றன ஒரு நாள் பாகிஸ்தான் எல்லையிலிருந்து ஒருமோட்டார் வந்தது. முள்கம்பிகள் விலக்கப்பட்டன. மோட்டார் ஜம்மு பிரதேசத்தில் பிரவேசித்தது. அதிலிருந்து பாகிஸ்தான் ராணுவத்தின் பிரிகேடியர் ஒருவன் இறங்கினான். இந்திய ராணுவத்தின் பிரிகேடியர் அவனை உற்சாகத்துடன் வரவேற்றான். இருவரும் பழைய நண்பர்கள். ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள், விவாதம் தொடங்கிற்று.

"தோழனே! நானை என்னை தாக்கப்போகிறுயாமே?"—இந்திய பிரிகேடியர் கேட்டான்.

'இல்லை அன்பனே! யாரோ வதந்தியைகிளப்பி விட்டிருக்கின்றனர். ஒருக்கால் அப்படி நடக்கவும் கூடும்"— பதில் கிடைத்தது.

சிறிது நேரம் வரை இம்மாதிரியாக சம்பாஷணை நடந்தபிறகு மோட்டார் வந்த திசையிலேயே திரும்பிச்சென்றுவிட்டதாம்.

பாகிஸ்தான் காஷ்மீரை அடையப் போவதில்லை.

—[ஷேக் அப்துல்லா]—

உலகத்தின் எல்லா நாடுகளும், டஜன் கணக்கான கமிஷன்களும் பாகிஸ்தானுக்கு உதவி செய்ய முன்வரினும், பாகிஸ்தான் காஷமீரை ஒருக்காலும் அடையப்போவதில்லை. காஷ்மீர் மக்கள் விழிப்படைந்து விட்டதே அதற்குக் காரணம். விழித்துக்கொண்ட மக்களை ஆயுத பலத்தைக் கொண்டு அடிமைப்படுத்திவிட எந்த சக்தியாலும் முடியாது. காஷ்மீரைப் போன்ற மத அடிப்படையற்றதொரு நாடு இந்தியாவைப் போன்றதொரு மத அடிப்படையற்ற நாட்டுடன் தான் சேரமுடியும். அவ்வழியிலிருந்து உலகத்தின் எந்த சக்தியும் நம்மை விலக்கமுடியாது. ஒடுக்கப்பட்ட மக்களை உயர்த்துவதே நம் லட்சியம். நம் நாட்டை மத அடிப்படையற்ற நாடாகச் செய்வதன் மூலமே அதைச் செய்யமுடியும். காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே சொந்தம். எந்த சக்தியும் காஷ்மீரிலுள்ள, ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்களை பிரிக்கமுடியாது. பிரிவினைக்குப் பிறகு இந்தியா பாகிஸ்தான் இரண்டிலும் வகுப்புக்கலவரங்கள் நடந்தன. கலவரங்களைத் தடுக்க இந்தியத்தலைவர்கள் முழு முயற்சி செய்தனர். ஆனால் பாகிஸ்தான் ஒன்றுமே செய்யவில்லை. துவேஷத்தை அடிப்படையாகக் கொண்டு பாகிஸ்தான் அமைந்ததே அதற்குக் காரணம்.

எதிர்த்துநிற்க பாகிஸ்தானல் முடியாது

பாகிஸ்தான் இந்தியாவை எதிர்த்து நிற்க முடியாது. நாம்மட்டும் விரும்பியிருந்தால் இதற்குமுன்பே எதிரிகளை விரட்டியிருக்க முடியும். ஆனால் நேர்மையும், ஒழுக்கமும் மிகுந்த ஜனநாயக வாதியான பண்டிட் ஜவஹர்லால்நேரு பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்னையை தீர்க்க சாத்தியமான சகல வழிகளிலும் முயன்று பாகிஸ்தானுக்கு போதிய அவகாசம் கொடுத்துவந்தார். நியாயமான வழிக்கு வர பாகிஸ்தான் மறுத்துவிட்டது. விட்டுக்கொண்டேபோனல் பாகிஸ்தானல் ஆட்டிவைக்கப்படும் நிரபாதிகள் வீணில் உயிரிழப்பர் என்பதை உணர்ந்தோம். ஆகையால் நம் மக்களையும் பாகிஸ்தான் மக்களையும் பாதுகாப்பதற்கு இந்த நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தது.

பாகிஸ்தானை மன்னிக்க முடியாது.

ஆகஸ்ட் 15-க்குப் பிறகு முற்றுகையிட்டு காஷ்மீரை ஆக்ரமிக்க பாகிஸ்தான் முயன்ற போதிலும் காஷ்மீரை தன்னுடன் இணைத்துக்கொள்ள இந்தியா முயலவில்லை. அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தி எதிர் காலத்தைப்பற்றி சிந்திப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்றே நாம் பாகிஸ்தானிடம் கோரினேம். அதற்குள் பாகிஸ்தான் படையெடுத்துவிட்டது. ரத்தக்கிளரிப்படலம் ஆரம்பமாகிவிட்டது. பாகிஸ்தான்கொள்ளைக்கூட்டத்தினர் காஷ்மீரிகளுடன் நடந்துகொண்டதை ஒருக்காலும் மன்னிக்க முடியாது. என்னதான் முயன்றலும் காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேரப்போவதில்லை. தங்கள் லாபத்தைப் பற்றி காஷ்மீரிகளுக்கு சிந்திக்கத் தெரியும். நாம் இந்தியாவுடன் சேர முடிவு செய்து விட்டோம். உலகத்தின் எந்த சக்தியும் அந்த முடிவை மாற்ற முடியாது. நாட்டின் நலனுக்காக தியாகம் செய்யத் தயாராயிருக்கும் எவருக்கும் முன்னேறுவதற்கான சந்தர்ப்பம் அளிப்போம். நவ காஷ்மீரில் ஸ்தோத்திரத்துக்கு இடமில்லை. திறமையை நிரூபிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பமிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை சிருஷ்டிக்கவே விரும்புகிறோம். லஞ்சம், இஷ்டமித்ர குடும்ப சம்ரக்ஷணை முதலிய தீமைகளை அகற்றி ஆகாயத்தில் பிரகாசிக்கும் சந்திரனைப் போல் காஷ்மீரும் பிரகாசிக்க வேண்டுமென்பதற்காகவே நான் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறேன்.

மாபெரும் முஸ்லிம் நாடு எது? பாகிஸ்தான் அல்ல!

நவ 21, பம்பாய்.

இங்குள்ள பூரா காலேஜில் பேசிய மிஸ்டர் ராகவன் (செக்கொஸ்லோவேகியாவின் இந்திய ஸ்தானீகர்) உலகம் பூராவிலும் பெரிய முஸ்லிம் நாடு என்று பாகிஸ்தான் உரிமை கொண்டாடுவதை மறுத்தார். "உலகத்திலேயே பெரிய முஸ்லிம்நாடு இந்தோனேஷியாவேயாகும். அதன் ஜனத்தொகை ஏழு கோடியே பத்து லட்சம், இந்தியாவுக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையே பல நூற்றண்டுகளாக அரசியல் கலாசார உறவுகள் இருந்து வருகின்றன. மேலும் இந்தோனேஷ்யாவின் சுதந்திரப் போராட்டத்துக்கு இந்தியாவின் தார்மீக உதவியும் கிடைத்து வருகிறது" என்று அவர் கூறினர்.

ரெயில்வே முஸ்லிம் சிப்பந்திகள்.

பிரிவினையின்போது இந்தியா பாகிஸ்தான் டொமினியன்களில் தற்காலீக சேவைக்கு பிராதான்யம் கொடுத்திருந்த ரயில்வே முஸ்லிம் சிப்பந்திகள் அனைவரையும் பிராவிடெண்டுபண்ட் முதலியதொகைகள் கொடுத்து வேலையிலிருந்து நீக்கிவிட இந்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

அவர்களை இரண்டு பிரிவாக பிரிக்கலாம்.

1. ஆறு மாத தற்காலீக சேவைக்காக பாகிஸ்தானுக்குப் போய் கெடு முடிந்ததும் திரும்பி வந்தவர்கள், 2. ஆறு மாதங்களுக்குத் தற்காலீகமாய் இந்திய சேவையிலிருக்க தாங்கள் செய்திருந்த முடிவை மாற்றிக்கொண்டு இந்திய் சேவையில் நிரந்தரமாய் இருக்க விரும்புகிறவர்கள்.

வேலையிலிருந்து நீக்குவதற்கு அவர்களுடைய விசுவாசத்தை நம்புவதற்கில்லை யென்று சொல்லப்படும் காரணம் நியாயமானதென்று ஒப்புக்கொள்வதற்கில்லை.

பிரமாதமாய் நம்பி பாகிஸ்தான் சென்று கஷ்டப்பட்டு மனமுடைந்து திரும்பியவர்களுக்கு பாகிஸ்தானிடம் விசுவாசமிருக்குமென்று நினைக்க முடியாது. அதற்கு மாறாக பாகிஸ்தானை எதிர்க்கவே செய்வரென்பது வெளிப்படை.

பாகிஸ்தான் போகாமல் இங்கேயே இருந்து சம்பவங்களின் போக்கைப் பார்த்த பிறகு இந்திய நிலைமையில் திருப்தியடைந்து தற்காலீக சேவைபற்றிய தங்கள் முடிவை மாற்றிக்கொண்டு இந்திய சேவையிலேயே நிரந்தரமாய் இருக்க விரும்புகிறவர்களை விஸ்வாஸமற்றவர்களென்று நினைப்பது எவ்வகையிலும் சரியல்ல.

மேலும் தார்மீகப் பொறுப்புக்கள் ஒருபுரமிருக்க சட்டபூர்வமாக சில பொறுப்புக்களும் இந்திய சர்க்காருக்கு இருந்துவருகின்றன அவற்றை உதாசீனம் செய்வது சரியாகாது

நாடு பிரிக்கப்பட்ட சமயத்தில் இரண்டு டொமினியன்களில் ஏதாவதொன்றை நிரந்தரமாகவோ அல்லது ஆறு மாதங்களுக்கு தற்காலீகமாகவோ தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமென்றும் ஆறுமாத தற்காலீக சேவையை ஏற்பவர்கள் கெடு முடிந்த பிறகு தங்கள் முடிவை மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்படுவரென்றும் அதனால் அவர்களுடைய உத்தியோகம் சம்பந்தப்பட்ட எந்த நலன்களும் பாதிக்கப்படமாட்டாதென்றும் குறைந்தபட்சம் அவர்கள் வகித்துவரும் அந்தஸ்தாவது நிலைத்திருக்கு மென்றும் இரண்டு டொமினியன்கள் சார்பிலும் உத்திரதாவம் அளிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இந்திய சர்க்கார் செய்திருக்கும் வருந்தத்தக்க முடிவை ஆட்சேபிக்காமலிருப்பதற்கில்லை. எந்த ஒரு ஜனநாயக சர்க்காரின் போக்குக்கும் மாறான இந்த முடிவால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தாங்கொணாத துயரங்களை சகிக்க வேண்டியிருக்கும். பிரிவினையால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் துன்பங்கள் உண்டு பண்ணும் விதத்தில் நியாயம் மறுக்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வேலையில்லா திண்டாட்டத்தின் பயங்கரத்தில் சிக்கிவிடாமல் காப்பாற்றுவதற்கு தங்கள் முடிவை சர்க்கார் புனராலோசனை செய்யுமென்று நம்புகிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் அகதிகள் பிரச்னையைக் கிளப்பிவிட்டு சில அதிகாரிகள் முட்டுக்கட்டை போடவும் கூடும். அதற்காக வென்று தவறான போக்கை சர்க்கார் மேற்கொள்ள முடியாது. பிரிவினையின் போதே இருதரப்பிலும் இருந்த சிப்பந்திகளின் எண்ணிக்கை இரண்டு சர்க்கார்களுக்கும் தெரிந்தேயிருந்தது.

அகதிகள் விஷயத்தில் நமக்கும் அளவற்ற அனுதாப முண்டு, இருப்பினும் அவர்களுக்காக மற்றவர்களின் நியாயமான உரிமைகள் மறுக்கப்படுவதை சரியென்று ஏற்றுக்கொள்ள முடியாது அகதிகளின் வாழ்க்கைக்கு வழி செய்வது சர்க்காரின் கடமை. அதை பூர்த்திசெய்ய இன்னொரு பொறுப்பை தட்டிக்கழிக்க வேண்டுமென்பதில்லை. பாகிஸ்தானில் தற்காலீக சேவை ஏற்பவர்களுடைய விஸ்வாஸம் பிற்காலத்தில் சந்தேகிக்கப் படுமென்று கண்டிப்பாக பிரிவினையின் போதே அறிவித்திருந்தால் இன்றைய நிலைமை ஏற்பட்டிருக்க முடியாது இன்று சர்க்கார் செய்திருக்கும் முடிவை எவராலும் ஆட்சேபிக்க முடியாமல் போயிருக்கும்.

பாரபட்சமின்றி எல்லா சிப்பந்திகளின் உரிமைகளை பாதுகாப்பதும் அனேகஇலாக்காக்களில் இன்று நிலவிவரும் வகுப்புவாத உணர்ச்சியை போக்குவதும் சர்க்காரின் கடமை. இந்திய முஸ்லிம்கள் சங்கடமான நிலைமையில் இருந்து வருகின்றனர். வகுப்புவாதத்திற்கு அவர்கள் இலக்காக்கப் படுவதை ஒருவரும் ஆட்சேபிப்பதில்லை. ஆனால் தங்களுடைய குறைகளை அவர்கள் எடுத்துச்சொல்ல வாயைத் திறந்தால் மட்டும் அவர்கள் மீது வகுப்புவாதிகள் என்று முத்திரை குத்தப்படுகின்றது.

முஸ்லிம்களுக்கு பிரத்தியேக சலுகைகள் காட்டும்படி நாம் கேட்கப்போவதில்லை. குறைந்த பட்சம் முஸ்லிம்களின் நியாயமான உரிமைகளாவது பாதுகாக்கப்பட வேண்டுமென்றே சர்க்காரைகேட்கிறோம் மீண்டும் சர்க்கார் தங்கள் முடிவை புனராலோசனை செய்யுமென்று நம்புகிறோம்.

சமூக வாழ்வு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கலை.

கலைகளில் மிகவும் முக்கியமானவை கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம் என்பன. இக்கலைகளொவ்வொன்றும் சமஸ்கிருதத்தைப் போலவும், மற்றுஞ் சில மாகாண இலக்கியங்களைப் போலவும் முஸல்மான்கள் இந்தியாவுக்கு வருமுன்பே சிறப்பாக தேர்ச்சி பெற்றவை. ஆகையால் இவை முஸ்லிம்களுடைய இத்தகைய கலைகளால் உட்கொள்ளப்படும் என எதிர் பார்க்கமுடியாது. அப்படி நடைபெறவும் இல்லை. முஸ்லிம் கலைகளில் எந்த அம்சங்கள் எடுத்தாளத் தகுதி வாய்ந்தனவாக, எடுத்தாளக் கூடியனவாக இருந்தனவோ அவைகளை ஹிந்துக்கலைகள் எடுத்துக்கொண்டனர். வட இந்திய மொழியைப்போன்று ஒரு புதிய கலையமைப்பை ஆக்கினர். உண்மையாகவே சில அம்சங்களில் இஸ்லாமியக் கலாசாரத்தையும் மாற்றியமைத்தனர்.

கட்டிடக் கலை.

இந்திய சரித்திரத்தில் ஹிந்து ஆட்சிக்காலம் அல்லது பௌத்த ஆட்சிக்காலத்திய கட்டிடங்களினின்றும் முஸ்லிம் ஆட்சிக் காலத்திய கட்டிடங்கள் பெரிதும் வேறுபடுகின்றன. ஆனால் இக் கட்டிடங்கள் முழுதும் அன்னிய நாட்டு முறையென்றும், அன்னியச் சூழ் நிலையில் நிறுவப்பட்டன என்றும் கூறமுடியாது. தாஜ்மஹல் கட்டும்போது ஹிந்துக் கட்டிடச் சிற்பிகளும், தொழிலாளிகளும் அதில் சேர்ந்திருக்க முடியாது என்பது நினைக்கக் கூட முடியாத விஷயமாக இருக்கிறது. மஹமதியர் காலத்தில் ஹிந்துக்கோயில்களைக் கட்டுவதில் மஹமதியத் தொழிலாளிகள் ஈடுபட்டிருக்கமாட்டார்களென்பது நினைக்க முடியாத விஷயம்; வட இந்தியாவில் இன்று ஹிந்துக்களுடைய வீடுகளைக் கட்டுவதற்கு மாத்திரமின்றி, கோயில்களைக் கட்டுவதற்கும் மஹமதியக் கொற்றர்களும் வேலைக்காரர்களும் அமர்த்தப்படுகிறார்கள். முஸ்லிம் காலத்தில் கட்டப்பட்டு புகழ் வாய்ந்த கட்டிடங்கள் சிலவற்றுள் ஹிந்து—மஹமதியக் கலைகளின் கூறுபாடுகள் ஒருங்கு சேர்ந்திருப்பதை நிபுணர்களும், கட்டிட வல்லுநரும் எடுத்துக் காட்டுகின்றனர்.

'தெய்வ வழிபாட்டிற்கும், வாழ்க்கை வசதிகளுக்கும், ராணுவக் காரியங்களுக்கும் கட்டப்பட்ட கட்டிடங்கள், சிறியா, எகிப்து, பாரசீகம் அல்லது மத்திய ஆசியா முதலிய நாடுகளின் சுத்தமான முஸ்லிம் கலையைக்கொண்டதாக இருக்கவில்லை அல்லது ஹிந்துக் கட்டிடங்கள், கோயில்கள், அரண்மனைகள், ஞாபகார்த்தக் கட்டிடங்கள் முதலியன சுத்தமான ஹிந்துக்கலையைக் கொண்டதாக இல்லை. முஸ்லிம் கட்டிடக் கலையின் அழகற்ற தன்மையும் அதன் கடுமையும் குறைக்கப்பட்டது. ஹிந்துக் கலையின் அளவுக்கு மிஞ்சிய பதுமைச் சிங்காரமும் குறைக்கப்பட்டது. வேலைப்பாடு, அலங்காரச் செழிப்பு, பொது அமைப்பு முதலியன ஹிந்துமயமாக இருந்தன. கமான் வளைவுகள், சுத்தமான டூம் கோபுரங்கள், வழுவழுப்பான சுவர்கள், விசாலமான உள்ளிடங்கள் எல்லாம் முஸ்லிம் கலையிலிருந்து புதிதாகப் புகுத்தப்பட்டவை. பதின் மூன்றாவது நூற்றாண்டிலிருந்து கட்டப்பட்ட கட்டிடங்கள்—ஹிந்துக்கள் அல்லது முஸ்லிம்களால் கட்டப்பட்டவை—கலையளவில் ஒன்றுபோலவே இருந்தன; நோக்கத்திற்கும் உபயோகத்திற்கும் தகுந்த மாதிரி வேறுபாடுகள் பெற்றிருந்தன. அவ்வப்பிரதேசங்களுக்குரிய மாதிரியையும் பரம்பரைப் பழக்கத்தை யொட்டியும் கட்டிடத்தின் போக்குகள் மாறுபட்டிருக்கலாம்.'

"இந்திய மஹமதியக் கட்டிட அமைப்பு முறைகளைப் படித்தறிய வசதியாக பெர்கூசன் பிரித்திருக்கிறார். இக் கட்டிட முறைகள் டில்லி, ஆஜ்மீர். கௌர், மாளவம், குஜராத், ஜான்பூர், பீஜப்பூர் முதலிய நகரங்களில் இருக்கின்றன. அவ்விடத்திய அரசர்கள், அரபியர், பட்டாணியர் துருக்கியர், பாரசீகர், மங்கோலியர் அல்லது இந்தியர் யாராகவும் இருந்திருக்கலாம்- அங்குள்ள மசூதிகளின் டூம் கோபுரங்கள், சமாதிக் கட்டிடங்கள், அரண்மனைகள் முதலியவற்றின் உருவமும் அமைப்பும், அவைகளுக்குச் சிகரமாக அமைந்திருக்கும் ஹிந்துச் சின்னங்களும், ஹிந்து கோயில்களைப் போலக் கட்டப்பட்ட மெஹ்ராபுகளும், உருவத்திலும் அமைப்பிலும் ஹிந்துமயமாக்கப்பட்ட ஆர்ச்சு வளைவுகளும், அலங்கார அமைப்புகளுக்கும் கட்குட அமைப்புக்களுக்கும் அடிப்படையாக இருக்கின்ற அர்த்தம் எல்லாம் ஒரு விஷயத்தை நமக்குத் தெளிவாக்குகின்றன அதாவது இந்தியக் கட்டிடக்காரர்களுகக மெக்காவின் தீர்க்கதரிசி ஹிந்துமதத்தைப் பூர்த்திசெய்ய வந்தவர்களில் ஒருவராவர். இவர்கள் ஹிந்துக்களாக இருந்து கொண்டே நல்ல மஹமதியர்களாகவும் இருக்கமுடியும்." இந்தியக் கலையைப் பற்றிய நூலில் ஹாவெல் தம்முடைய இந்தக் கோட்பாட்டை மிக விளக்கமாக நிறுவி யிருக்கிறார், அதற்கு மேலும்

விவரிப்பது இயலாது' 'இந்த அமைப்பு முறையின் செல்வாக்கு பதினெட்டாவது நூற்றாண்டில் இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் பரவியது. நெடுந்தூரத்திலுள்ள நேபாளமும் இந்தத் தொத்து நோயிலிருந்து விடுபடவில்லை.' 'பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரண்மனைகள், நினைவுக் கட்டிடங்கள், கோயில்கள் யாவும் மேற்கில் ஜாம் நகரிலோ, கிழக்கில் கல்கத்தாவிலோ அல்லது பஞ்சாபில் சீக்கியராலோ அல்லது மத்திய இந்தியாவில் ஜைனர்களாலோ எங்கு கட்டப்பட்டிருப்பினும் யாவும் ஹிந்து-—முஸ்லிம் கட்டிட அமைப்பு முறையிலேயே இருந்தன. இந்தியாவில் ஞாபகார்த்தக் கட்டிடக் கலைகளில் மாத்திரம் ஹிந்து முஸ்லிம் அமைப்பு மேலோங்கி நிற்கவில்லை. வாழ்க்கை வசதிகளுக்கு உபயோகப்படும் எல்லாக் கட்டிடங்களிலும் அதாவது வீடுகள், தெருக்கள், படகுத்துறைகள், நீராடு துறைகள், எல்லாவற்றிலும் அவ்வமைப்பு நிலை நிற்க ஆரம்பித்தது.' 'மனையமைப்புக்கள் பொதுவாகத் தட்ப வெட்பம் காரணமாக மகாணத்துக்கு மகாணம் வேறுபடுவதுண்டு. ஆனால் ஓர் ஹிந்து வசிக்கும் வீட்டிற்கும் முஸ்லிம் வசிக்கும் வீட்டிற்கும் திட்டத்திலும் கட்டிடத்திலும் வேறுபாடே கிடையாது

சிலைச் சிற்பம்.

ஹிந்துக் கோயில்களில் உருவங்களும் சிலைகளும் முக்கியமாக இருப்பதால் இந்தியாவில் சிற்பக் கலை பெரிதும் வளர்ச்சியடைந்தது. உருவங்களையும் சிலைகளையும் வணங்குவது இஸ்லாமில் கண்டிக்கப்படுகிறது. ஆகையால் இஸ்லாமிய நாடுகளில் அவைகள் விருத்தியாக்கப்படவில்லை இஸ்லாமும் இந்தியச் சிற்பக்கலையை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. 'பாரசீக மன்னர்களைப் பின்பற்றி இந்திய முஸ்லிம் அரசர்கள், முக்கியமாக மொகலாயச் சக்கரவர்த்திகள் தங்களுடைய கட்டிடங்கள், அரண்மனைகள், இன்ப விலாசங்கள் முதலியவைகளை அழகுபடுத்த ஓவியர்கள் துணையை நாடியது போலச் சிற்பிகளுடைய துணையையும் நாடினார்கள். (தொடரும்.)

— இந்தியா பிரிக்கப்பட்டால் ....
பாபு ராஜேந்திர பிரஸாத்.

வழி காட்டுவார் பண்டித நேரு.

இந்திய சுதந்திரம் உலக சமாதானத்துக்கு நன்மை பயக்கும். இவ்விஷயத்தில் உலகம் பண்டித நேருவை எதிர்பார்க்கின்றது. இந்தியா தன் சுதந்திரத்தையும் பாதுகாத்துக்கொண்டு இதர நாடுகளுடன் சுமுகமான தொடர்பு கொள்வதிலும் தன்னுடைய பங்கை நல்ல முறையில் செய்யுமென்று நான் பூரணமாய் நம்புகிறேன்.

சுதந்திரத்துக்குப்பிறகு வரி கொடுக்கவேண்டிய அவசியமே இருக்காதென்று நினைத்திருந்தவர்கள் தவறான நம்பிக்கையே கொண்டிருந்தனர். புதிய ஆட்சி முறையின்மூலம் இந்தியாவிலுள்ள ஏழைகள், பணக்காரர்கள், வாலிபர்கள், கிழவர்கள் அனைவருக்கும் சரி சம உரிமைகள் கிடைக்கும். ஏழைகளுக்கு சர்க்கார் உதவிசெய்யும்.

சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்பவர்களுக்கு இதுவரை தேசப்பற்று ஏற்படவில்லை. தங்கள் உத்தியோகங்களிலும் சர்க்கார் நடப்பிலும் தான் அக்கறை கொண்டிருக்கின்றனர். தங்களுடைய நோக்கங்களை அவர்கள் மாற்றிக்கொள்ளவேண்டிய தவசியம்.

சுதந்திரம் கிடைத்தவுடன் நம் மந்திரிகளை அநேக தொல்லைகள் சூழ்ந்துகொண்டன. வேறு துறையில் கவனம்செலுத்த அவர்களுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. முதலில் வகுப்புவாதக் கலவரங்கள் மூண்டன. பிறகு சமஸ்தானப் பிரச்னை தலைதூக்கிற்று. சர்தார் படேலின் தீர்க்க தரிசனத்தின் பயனாக இப் பிரச்னைகள் சீக்கிரமே தீர்ந்துவிட்டன. ஹைதராபாத் விஷயம் தீர்ந்த பிறகு இனி காஷ்மீர் பிரச்னை தீர்ப்பதில் கஷ்டமில்லை. நம்முடைய அரசாங்கம் ஒரு புதுமையாகும். நாட்டில் ஏழு லட்சம் கிராமங்களும், 218 நகரங்களுமிருக்கின்றன. வழி காட்டுவதற்காக பண்டித நேரு இருக்கிறார். உலக சமாதானத்துக்காக உலகம் அவரையே எதிர்பார்த்து நிற்கின்றது—(டில்லி ராம்லீலா மைதானத்தில், டாக்டர் பட்டாபி சீதாராமையா.)

இஸ்லாமிய ஆட்சியில் கபனுக்கும் துணியில்லை

சிந்து மாகாண கிராமங்களிலிருந்து கிடைக்கும் தகவல்களிலிருந்து கிராமங்களில் கடுமையான துணிப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மாகாணத்தில் அநேக இடங்களில் இறந்தவர்களுக்கு கபன் துணியும் கிடைப்பதில்லை. பிணங்கள் உடுத்தியிருந்த பழைய கந்தைகளுடன் அடக்கம் செய்யப்படுகின்றன. இதைப்பார்த்து ஜனங்கள், உலகத்தின் மிகப் பெரிய இஸ்லாமிய ஆட்சியில் முஸ்லிம்கள் மத அடிப்படையில் அடக்கம் செய்வதற்குக்கூட முடியவில்லையென்று பஹிரங்கமாய் குறை கூற ஆரம்பித்திருக்கின்றனர்,

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.